பக்கங்கள்: 12+ IV = பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 26 வியாழக்கிழமை (08-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 135

### பாதுகாப்புக்கு வந்த இராணுவத்தினரால்

# மட்டு-அம்பாறை தமிழ் எம்.பிக்கள் ஐவரும் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்பட்டனர்!

## கருணாவின் உத்தரவை அடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை?

கொழும்பு,ஏப்.8

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவான ஐந்து எம்பிக்களும் நேற்று கொழும்பிலிருந்து பலவந்தமாகக் கிழக்குக்குக் கூட்டிச் செல்லப்பட்டிருக்கின்றார்கள் எனத் தெரியவருகின்றது.

தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களின கூட்டம் நேற்றும், முன்தினமும் கொழும்பில் நடைபெற்றதால் அதில் பங்குபற்றுவதற்காக கொழும்பிற்கு இந்த ஐந்து எம்.பிக்களும் வந்திருந்தனர்.

இராணுவத்தினரே அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளித்து அவர்களைக் கொழும்பிற்குக் கூட்டிவந்தனர். எனினும், அவர்களின் பாதுகாவலர்கள் என்ற ரீதியில் கருணாவின் ஆள்கள் சிலரும் கூட வந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் கூட்டமைப்பு எம்பிக்களின் கூட்டம் நடைபெற்ற சமயம் கருணாவின் ஆள்களும் உள்ளே புகுந்து அமர்ந்துகொண்டனர் என்றும் -

எனினும், நேற்றைய கூட்டத்தில் எம்.பிக்களைத் தவிர வேறு எவரும் உள்ளே அனுமதிக்கப்படாததால் இவர்களால் முதலில் உள்ளே நுழைய முடியவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அதனால் வாசலில் மறித்தவர்களுடன் வாய்த்தர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் திரும்பிச்சென்றனர்.

எனினும், பின்னர் கூட்ட முடிவில பத்திரிகையாளர்கள் உள்ளே அனும

(12ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். சிறையிலிருந்து கைதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ் சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று தப்பியோடியுள்ளார்.

பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த கிட்னஸ் நிசாந்தன் என்ற கைதியே தப்பியோடியவராவார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் சிறைக்கூண்டுக்குள் இருந்த இவரை குளிப்பதற்காக வெளியே விட்டபோது சிறைச்சாலை மதிலைப் பாய்ந்து தப்பியோடினார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் கடந்த இரு மாதங்களாக இவர் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் யாழ். பொலீஸில முறைப்பாடு செய்துள்ளனர்.(ஐ-8-7)

### ஜனாதிபதி நேற்றுப் பிரகடனம்

# அரசமைப்பை சீர்திருத்தம் செய்ய உடனே அரசமைப்பு நிர்ணய சபை

## புலிகளுடன் விரைவில் பேச்சு என்றும் அறிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்8

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விதத்தில் அரசமைப்பு சீர்திருத்தப்படும். அதனைச் செய்வதற்காக அரசமைப்பு நிர்ணய சபையை உடனடியாக அமைப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.**

**- இப்படி அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

நேற்று நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத் தேர்தலில் ஜனநாயகத்துக்கான தனது நிரந்தர அர்ப்பணிப்பை வெளிக்காட்டுவதன் மூலம் புதியதோர் அரசாங்கத்தை உருவாக்குவதற்காகத் தமது சுதந்திரமான வாக்குகளைப் பிரயோகித்த பெரும் எண்ணிக்கையிலான இலங்கை வாழ் மக்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும் உறுப்பினர்களுக்கும் எனது உளமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

வறுமையை இல்லாதொழித்து, துரித பொருளாதார அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதுடன், ஊழல் - மோசடியின்றிய, செயற்திறன் வாய்ந்த - ஆட்சியொன்றைக் கட்டியெழுப்பவும், யாவருக்கும் நீதியையும் நிலைபேறான சமாதானத்தையும் உருவாக்குவதற்காக, புதிய அரசிற்குச் சக்தியும், தைரியமும், ஆசீர்வாதமும் கிட்டவேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

இம்முறை நடைபெற்ற தேர்தல், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அமைதியாகவும், குறைந்தளவிலான வன்செயல்களுடனும், இடம்பெற்ற தேர்தல என வரலாற்றில் பதிவாகியுள்ளமை எம் அனைவரினதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். இது விடயத்தில் குறிப்பாக, தேர்தல்கள் ஆணையாளருக்கும், அவரது பணியாட்டொகுதியினருக்கும், சகல அரச ஊழியர்களுக்கும், பொலீஸாருக்கும், முப்படையினருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். அதேபோல, சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர்கள் - குறிப்பாக சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தேர்தல கண்காணிப்புக் குழுக்கள் ஆற்றிய பணியை நாம் பெரிதும் போற்றுகின்றோம்.



1977, 1989, 2001ஆம் ஆண்டுகளில பொதுத் தேர்தல்கள் முடிவடைந்தது டன் தலைதூக்கிய வன்செயல்கள், இம்முறை தேர்தலையடுத்து தலைதூக்குவதற்கு நாம் இடமளிக்கவில்லை. 1994 இல் போலவே இம்முறையும் அதனைத் தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளிட்ட சுதந்திர முன்னணியின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும, உறுப்பினர்களுக்கும் முழுநாட்டினதும நன்றியைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

மக்களினதும், நாட்டினதும் தீராப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் கிட்டாததன் காரணமாக, அத்தகைய

(12ஆம் பக்கம் பார்க்க)

### சந்திரிகா - ரணில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஏப்.8

முன்னாள் பிரதமரும் ஐ.தே.கவின தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க 20 தமிழ் எம்.பிக்களும் வற்புறுத்து

## கூட்டாக ஒப்பமிட்டு நேற்று அறிக்கை

கொழும்பு,ஏப்.8

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் - தமிழ் மக்களின் ஏகோபித்த, உண்மையான பிரதிநிதிகளாகிய புலிகள் அமைப்புடன் தாமதமின்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

தமிழரசுக்கட்சியின் பெயரிலும் அதன் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றியீட்டிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருபது பேரும் கூட்டாக ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ வடக்கு - கிழக்கில் விரைவில் ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமுர்த்தி பொறுப்பு ஜனாதிபதி வசம்; ஊடகத்துறை சரத் அமுனுகமவிடம்?

## புதிய அமைச்சரவையில் அனுராவுக்கு உல்லாசப்பயணத்துறை

கொழும்பு,ஏப்.8

புதிய அமைச்சரவை அமைக்கப்படும் போது அதில் சமுர்த்தி விவகார அமைச்சை ஜனாதிபதி குமாரதுங்கவே தமது பொறுப்பில் நேரடியாகக் கையாள்வார் என்று கொழும்பு செய்திவட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

புதிய பிரதமர் பதவியேற்றுள்ள போதிலும் புதிய அமைச்சரவையை அறிவிப்பது தாமதமடைவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பேச்சாளர் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் 35 அமைச்சர்களும் 35 பிரதி அமைச்சர்களும் இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றுள் நான்கு அமைச்சுப் பொறுப்புக்களும் நான்கு பிரதி அமைச்சுப் பொறுப்புகளும் ஜே.வி.பியினருக்கு வழங்கப்படும். அமைச்சுப்பொறுப்புகள் வழங்கப்பட வேண்டியவர்களின் பெயர விவரங்களை ஜே.வி.பியின் அரசியல் குழு ஏற்கனவே ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் தமது தேசியம் பற்றி சிந்திக்கவேண்டிய வேளை இது

## பி.பி.ஸி. பேட்டியில் ஹக்கீம் தெரிவிப்பு

லண்டன்,ஏப்.8

தமிழர்கள் தமிழ்த் தேசியம் குறித்து சிந்திக்கின்ற வேளையில், முஸ்லிம்களும் தமது தேசியம் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

- இப்படித் தெரிவித்தார் ஸ்ரீ.மு.கா தலைவர் ரவூப்ஹக்கீம்.

புதிதாகப் பதவி ஏற்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஹக்கீமை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்புக் குறித்து பி.பி.ஸியின் தமிழோசைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இப்படிக் கூறினார். அப்பேட்டியில் ஹக்கீம் மேலும் கூறியதாவது:-

புதிதாகப் பதவி ஏற்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஒரு சிறுபான்மை அரசாகவே உள்ளது. ஆயினும், நிபந்தனையுடனான ஆதரவைப்பற்றி நாங்கள் இன்னும் தீவிரமாகப் பரிசிலிக்க இயலும். எதிர்க்கட்சியிலிருந்து கொண்டே அவர்களை ஆதரிப்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தேர்தலில் தோல்வி என்றாலும் ரணிலின் தலைமையில் நம்பிக்கை

## ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,ஏப்.8

பொதுத் தேர்தலில் தோல்வி கண்டுள்ள போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் ரணில் விக்கிரமசிங்காவில் நம்பிக்கை இழக்கவில்லை. தொடர்ந்து அவரின் தலைமையில் நம்பிக்கை கொண்டுள்ளனர். ரணில் தலைமைப் பதவியிலிருந்து இறங்க முன்வந்தபோதிலும் ஐ.தே.கவினர் விடவில்லை. அவரின் பூரண நம்பிக்கை தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்.

நேற்றுமுன்தினம் ஐ.தே.கவின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடனும், மக்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அதனால் கட்சியின் வெற்றி உட்பட மற்றெல்லா விடயங்களும் பின் தள்ளப்பட்டுவிட்டன. மாற்றுக் கட்சிகளைப் போன்று மக்களைக் கவரக்கூடிய பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிவாகை சூடியிருக்கும் என்று கூட்டத்தில் பேசிய முன்னாள் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்தன குறிப்பிட்டுள்ளார்.

கூட்டத்துக்குத் தலைவர், ரணில் விக்கிரமசிங்கவே தலைமை தாங்கினார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கான காரணங்கள் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

நடைபெற்ற தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார். எனது தலைமை குறித்து ஏதாவது சந்தேகம் இருப்பின் அதனை வெளிப்படையாகத் தெரிவித்து வேண்டிய முடிவைச் செய்து கொள்ளுங்கள். அதற்கு நான் கட்டுப்படுவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் தோல்விக்குத் தனி ஒருவர் மட்டும் பொறுப்பாக முடியாது. அனைத்து அமைச்சர்களும் பொறுப்பேற்க வேண்டும். எங்கள் அனைவருக்கும் கூட்டுப் பொறுப்புண்டு என முன்னாள் அமைச்சர்களான ரவி கருணாநாயக்கவும், காமினி லொக்குகேயும் எடுத்துக் கூறினர்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எமக்குப் பூரணமான நம்பிக்கை உண்டு. கட்சியின் வளர்ச்சிக்காக அவர் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டின் மீட்சிக்காகத் தலைவர் தயாரித்துள்ள அபிவிருத்தித் திட்டத்துக்கும், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு வழங்குவோம் என்ற ஒரு பிரேரணையை முன்னாள் அமைச்சர் எம்.எச்.முஹம்மது முன்மொழிய முன்னாள் அமைச்சர் டபிள்யூ.கே.எம்.லொக்குபண்டார அதனை வழிமொழிந்தார்.

பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

தோல்வி தற்காலிகமானது. எனவே, தளர்ச்சியடைந்துவிடாமல் தத்தமது தொகுதிகளில் கட்சி நடவடிக்கையுடன் செற்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க அனைவரையும் கேட்டுக்கொண்டார். (எ-க)

# புதிய பிரதமரின் பதவியை அடுத்து அம்பாந்தோட்டையில் கொண்டாட்டம்

கொழும்பு,ஏப்.8

புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளமையை, அம்பாந்தோட்டைப் பிரதேச மக்கள் பெரும ஆரவாரத்துடன் கொண்டாடிவருகின்றனர்.

அபாந்தோட்டைப் பிரதேசத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதமராகப் பதவியேற்றார்.

இதனையடுத்து, அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டாடி வருகின்றனர். தங்காலை, பெலிஅத்த போன்ற பிரதேசங்களில் வீதிகள் எங்கும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புதிய பிரதமரின் நியமனம், அமபாந்தோட்டைப் பிரதேச மக்களுக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-9)

# அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய நால்வருக்கு தலா 5 ஆயிரம் அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய நான்கு பேருக்கு யாழ். நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த சின்னத்துரை பரமலிங்கம், தலையாழி வீதியைச் சேர்ந்த தம்பையா வரதராசா, கொழும்புத்துறையைச் சேர்ந்த யோகராசா கஜேந்திரன் மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த பொன்னுத்துரை ரஞ்சன் ஆகிய நால்வரும் உழவு இயந்திரத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியமை தொடர்பாக யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சம்பந்தப்பட்ட நால்வரையும் யாழ். பொலீஸார் நேற்று நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர். இதன்போது சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து அவர்கள் நால்வரையும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், மணலைப் பறிமுதல்செய்யுமாறு உத்தரவிட்டார். (எ-5)

### முதலுதவி சிகிச்சை நிலையம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை முதலுதவி சங்கம் ஆலய வடக்கு வீதியில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

இதேவேளை -

மானிப்பாய் ஆலடிச் சந்தி பிரதான வீதியில் இம்முறையும் பாரிய தண்ணீர்ப் பந்தல் (தாக சாந்தி நிலையம்) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மானிப்பாய்ப் பகுதியிலுள்ள வர்த்தகர்களின் பங்களிப்புடன் வீதிக்குக் குறுக்காக இப்பெரிய பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# சுகாதாரத் திணைக்களத்துக்கு 39 மோட்டார் சைக்கிள்கள்

வலி.தென்மேற்கு,ஏப்.8

'யுனிசெவ்' நிறுவனம் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு 39 மோட்டார் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

தாய், சேய் நலன் பயிற்சித் திட்டத்தின்கீழ் இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் யாழ் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப் பாளர் பணிமனையில் வைத்து யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதத்திடம் 'யுனிசெவ்' நிறுவன உயர் அதிகாரியினால் இந்த மோட்டார் சைக்கிள்கள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும்.

யாழ் சுகாதாரப் பிராந்திய திணைக்களத்திலுள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பணிபுரிந்து வரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உத்தியோகபூர்வ பயன்பாட்டுக்கு இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும். (ஐ-135)

### தபாலகம் இடம்மாற்றம்

வலி.தென்மேற்கு,ஏப்.8

பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த பண்டத்தரிப்பு தபால் அலுவலகம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாக, கீரிமலை வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தபால் அலுவலகத்தின புதிய தபால் அதிபராக கொழும்பு கொட்டாஞ்சேனை தபால் அலுவலகத்தில் கடமையாற்றிய எம்.நடராசா இம்மாதம் தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். (ஐ-135)

# குடும்பஸ்தர் வீடு புகுந்து தாக்கப்பட்டமை: மூவர் அடையாளம் காணப்பட்டனர்

வரணி வடக்குப் பகுதியில் கடந்த பொதுத்தேர்தல் வாக்களிப்பு தினத்திற்கு மறுநாள் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட ஆறு நபர்கள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

பதில் நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் நடைபெற்ற அணிவகுப்பில் மூன்று பேர் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

இதனையடுத்து ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

வரணி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானம் என்ற குடும்பஸ்தர் கடந்த 3ஆம் திகதி காலை பத்துக்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டதாகக் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து ஆறு சந்தேக நபர்களைப் பொலீஸார் கைதுசெய்திருந்தனர்.

நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் நேற்று அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோது தாக்குதலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் மூவரை மூன்று சாட்சிகள் அடையாளம் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டமையே மேற்படி நபர் தாக்குதலுக்கு உள்ளானமைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

*(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)* (எ-117-31)

### தேர்தல் வன்செயல்கள்: 398 பேர் கைது!

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின்போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 398 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் முக்கிய அரசியல் கட்சி ஒன்று உட்படப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர் என்று தேர்தல் வன்முறைகள் தொடர்பான பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இவர்களில் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றத்தால் தமக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும ஜயந்த விக்கிரமரத்ன குறிப்பிட்டார். (எ-க)

### அண்ணப்பிளவு சத்திர சிகிச்சைக்கு பெயர் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். போதனா வைத்திய சாலையில் இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அண்ணப்பிளவு சத்திர சிகிச்சையைப் பெறவிரும்புவோர் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப்பிரிவின் வைத்தியப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வரவுள்ள அந்நாட்டின் இராணுவ மருத்துவக்குழுவினர் இம்மாதம் 26ஆம் திகதிமுதல் தொடர்ந்து இரு வாரங்கள் யாழ். குடாநாட்டில் தங்கியிருந்து அண்ணப்பிளவு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன், பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை, மூக்கு, தொண்டை, காது ஆகியவற்றுக்கான சத்திர சிகிச்சைகள், பொதுச் சத்திர சிகிச்சைகள் என் பலவற்றையும் இந்த வைத்திய நிபுணர் குழுவினர் மேற்கொள்வார்கள். (எ-7-15)

# தேர்தலால் பிளவுண்ட மக்களிடையே நல்லுறவை வளர்க்கக் குழுக்கள்

## பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.8

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்தியது போன்று அந்நிலையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் வகையில், தேர்தலை முன்னிட்டு தமக்குள் பிளவுபட்டு நிற்கும் பொதுமக்களிடையே நல்லுறவை வளர்ப்பது தொடர்பாக, சிவில் பாதுகாப்புக் குழுக்களை நடைமுறைப்படுத்த ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு, சகல மாகாணப் பிரதிப் பொலஸ்மா அதிபர்களுக்கும் பொலீஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஒரு சில பிரதேசங்களில் சிலர் தமது சொந்த விவகாரங்களைத் தேர்தல் வன்முறைச் சம்பவங்களாக மாற்றுவதற்கு முயற்சி செய்வதாகத் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசு அமைக்கப்பட்டதன் பின்னரும் கூட, தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் சில நாள்கள் வரை அவ்வாறே நடைமுறைப்படுத்த பொலீஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குடும்பநல சுகாதார சேவை ஊழியர் பதவிக்கு விண்ணப்பம்

குருநகர்,ஏப்.8

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் தமிழ்மொழி மூல குடும்பநல சுகாதாரசேவை உத்தியோகத்தர்களை (மருத்துவமாதர்) பயிற்றுவிப்பதற்கான விண்ணப்பங்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சுச் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சை, ஏதாவது ஒன்றில் இரு தடவைகள் தோற்றி ஆறு பாடங்களில் பெற்றுள்ள சித்திகளுடன் அவற்றில் ஒரு தடவை ஐந்து பாடங்களில் தமிழ் அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், இன்னுமொரு பாடத்திலும் நான்கு திறமைச் சித்திகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கு விண்ணப்பிப்பவர் 2004 ஜனவரி 25ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன் உயரம் 4 அடி 10 அங்குலத்துக்குக் குறையாதவராகவும் விவாகம் செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவங்களையும் அறிவுறுத்தல்களையும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதன் கீழ் இயங்கும் சுகாதார நிறுவனங்களிலும் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-51)

### பாவனைக்கு அனுமதிக்கப்படாத

# பாக். கருக்கலைப்பு மருந்து யாழ். பார்மஸியில் மீட்பு!

வலி.தென்மேற்கு,ஏப்.8

யாழ். நகரிலுள்ள தனியார் மருந்தகம் (பார்மஸி) ஒன்றில் கருக்கலைப்புக்குப் பயன்படுத்தப்படும் மருந்துக் குளிகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தபோது திடீர் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன. நேற்று புதன்கிழமை காலை யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பார்மஸிகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டார். அப்போது பார்மஸி ஒன்றில் ஔடதங்கள், உபாயங்கள் அதிகார சபையில் பதிவுசெய்யப்படாத - விற்பனைக்குத் தடைசெய்யப்பட்ட - மேற்படி கருக்கலைப்பு மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கபட்டது.

பாகிஸ்தான் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த மருந்துக் குழிகைகள் - சட்ட விரோதமாக இங்கு விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டவை எனவும், இதனை வாங்கிப் பயன்படுத்துபவர்களுக்கு குறைப்பிரசவத்துடன அங்கவீனமான குழந்தைகள் பிறக்க வாய்ப்பு உள்ளதாகவும் யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மருந்துக் குழிகைகளை விற்பனைக்கு வைத்திருந்த பார்மஸியின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஐ-135)

### தேசியப் பட்டியல் எம்.பிக்கள் பெயர்கள் அனுப்பக் காலக்கெடு

தேசியப்பட்டியல் எம்.பிக்களாக யார் யாரை நியமிப்பது? பெயர் விவரங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்குள் அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அரசியல் கட்சிகளைக் கேட்டிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கைத்தமிழரசுக்கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கே தேசியப்பட்டியல் நியமனங்கள் கிடைக்கின்றன. அவை இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன்னராகப் பெயர் விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். (எ-க)

# போரினால் கணவனை இழந்த பெண்களுக்கு சுயமுயற்சிக் கடன்

யாழ்ப்பாணம்,ஏப்.8

போரினால் கணவனை இழந்த குடும்பத்தலைவிகளுக்கான சுயதொழில் கடன் யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள குடும்ப புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் பிராந்திய இணைப்பாளர் எஸ்.சி. எஸ்சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கொழும்பு மனித நேய அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராகவும் -

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அறங்காவலர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். அகவொளி நிறுவனப் பணிப்பாளர் வண. எஸ். ஜே.இராசநாயகம் அடிகளார், யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவா வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-6)

# தனது உயிருக்கு ஆபத்து என்று கூறுகிறார் சோனியா

புதுடில்லி,ஏப்.8

தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கவலை தெரிவித்தார்.

ரேபரேலித் தொகுதியில் நேற்று முன்தினம் வேட்புமனுத் தாக்கல் செய்த பிறகு பிபிஸிக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவித்ததாவது:-

எனது மாமியார் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டார். என் கணவர் தற்கொலைப் படைத் தாக்குதலில உயிரிழந்தார்.

எனது மாமியாரும் (இந்திராகாந்தி) கணவரும் (ராஜீவ் காந்தி) நாட்டுக்காக உயிர்துறந்தனர். அவர்கள் இவ்வாறு நாட்டுக்காக உயிர்துறப்பதைத் தவிர வேறுவழியை நினைத்திருப்பார்களா என்று தெரியவில்லை.

உத்தரப்பிரதேசத்தில் சில கட்சிகளுடன் உடன்பாடு காணவிரும்பினோம்; முயன்றோம். ஆனால், அதற்குச் சாதகமான பதில்வரவில்லை.

எனினும், இதரகட்சிகளுடன் உடனபாடு ஏற்படாவிட்டால், தனித்துப் போட்டியிடுவோம் என்று ஏற்கனவே தெளிவுபடுத்தினேன். இப்போது, உத்தரப் பிரதேச மாநிலத்தில் எவ்வித அச்சமும் இல்லாமல் தனியாகத்தான் போட்டியிடுகிறோம்.

ரேபரேலி தொகுதியில் போட்டியிடுவதில் எனக்கு ஒரு சிறப்புஉண்டு. இத்தொகுதியில் எனது மாமியார் இநதிராகாந்தி மட்டுமல்ல, மாமனார் பெரோஸ் காந்தியும் போட்டியிட்டு வென்றனர் என்றார் சோனியாகாந்தி.

# நடிகை ரோஜாவுக்கு எதிர்ப்பு!



இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு தேசம் கட்சி சார்பில் நகரித தொகுதியில் போட்டியிடும் நடிகை ரோஜாவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து அக்கட்சியின் தொண்டர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் கொடும் பாவியையும் அவர்கள் எரித்தனர்.

முதலில் இத்தொகுதியில் அக்கட்சி சார்பில் துரைசாமி ராஜு" என்ற திரைப்படத் தயாரிப்பாளர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். அதனால் அவர் வேட்புமனுவும் தாக்கல் செய்தார்.

திடீரெனத் தனது முடிவில் மாற்றம செய்து நடிகை ரோஜா அதிகாரப்பூர்வ வேட்பாளர் என நாயுடு அறிவித்து விட்டார்.

இதனால் கோபமுற்ற தெலுங்கு தேசம் தொண்டர்கள் போராட்டத்தில குதித்துள்ளனர். (ஒ)

# ரஜனி ரசிகர்கள் மீது தாக்குதல்: வாகனங்கள், ஆயுதங்கள் பறிமுதல்!

தமிழக நகரான மதுரையில் டாகடர் ராமதாஸ"க்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்ற ரஜனிகாந்த் ரசிகர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக, பா.ம.கவினர் பயன்படுத்திய 2 வாகனங்கள், அரிவாள், உருட்டுக்கட்டை, கம்பி உளளிட்ட ஆயுதங்களைப் பொலீஸார் கைபபற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் உட்பட 26 பேர்மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் 7 பேர் ஏற்கனவே கைது செய்யபபட்டுள்ளனர்.

மதுரை மக்களவைத் தொகுதியில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பி. மோகனை ஆதரித்து, மதுரையில் பா.ம.க. சார்பில் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்க, ராமதாஸ் காரில் மதுரை வந்தபோது நெலபேட்டை அருகேயுள்ள அண்ணாசிலைப பகுதியில் நின்றுகொண்டிருந்த ரஜனி ரசிகர்கள் சிலர் ராமதாஸ"க்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்றனர்.

அப்போது ராமதாஸ"டன் கார்களில் வந்த அவரது கட்சியினர் ரஜனி ரசிகர்களைத் தாக்கினர். இதில் ரஜனி ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான புகார்களின் பேரில் பொலீஸார் டாக்டர் ராமதாஸ் மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் பா.ம.கவினர் 7 போ ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# ரஜனிகாந்த் கண்டனம்

சென்னை,ஏப்.8

தமிழகத்தின் மதுரையில் பா.ம.க. தொண்டர்களால் தமது ரசிகர்கள் தாக்கப்பட்டதற்கு நடிகர் ரஜனிகாந்த் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து சென்னை திரும்பியதும் செய்தியாளாகளிடம் மனம் திறந்து பேசப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சிருங்கேரியில் இருந்து தொலைபேசி மூலம் அவர் விடுத்த அறிக்கையில் -

'என்னை வாழவைக்கும் தெய்வஙகளாகிய என் ரசிகர்களே! தமிழ் மக்களே! டாக்டர் ராமதாஸின் செயல்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள்.



'மதுரையில் என் ரசிகர்களுக்கு நடந்த சம்பவம் என் நெஞ்சை உலுக்கியது. நேரடியாக ஆறுதல் சொல்ல மதுரைக்கே புறப்பட இருந்தேன் ஆனால, இத்தருணத்தில் நான் அங்கு சென்று என் ரசிகளின் உணர்ச்சிகளை மேலும் கிளறக்கூடாது என்று எண்ணி இங்கிருந்தே, தாக்குதலுக்கு உள்ளான ரசிகர்களுடன் என் மனமார்ந்த ஆறுதலைத தெரிவித்துக் கொள்கிறேன். இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

'நான் சென்னை திரும்பியதும் பததிரிகை, தொலைக்காட்சி நண்பர்களைச் சந்தித்து வாய்திறக்கப் போவதில்லை; மனம் திறக்கப் போகிறேன். அதுவரை ரசிகப் பெருமக்களை பொறுமைகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழ் மக்கள், வளர்க தமிழ் நாடு ஜெய்கிந்'

- என்று ரஜனி தெரிவித்தார். (ஒ)

# ரஜனி மன்றக்கொடி கிழிப்பு; பா.ம.க. நிர்வாகி ஒருவர் கைது!

தமிழகத்தில் சேலத்தில் ரஜனி ரசிகர் மன்றக்கொடியைக் கிழித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பா.ம.க. நிர்வாகி கைதுசெய்யப்பட்டார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸைக் கண்டித்து சேலத்தில் ரஜனி ரசிகர்கள் உண்ணாவிரதம் இருந்தனா. இதில் பங்கேற்க கொண்டலாம்பட்டி ரஜனி மன்றத்தைச்சேர்ந்த ராஜா, புஸ்பவனம், சரவணன், புண்ணியகோடி ஆகியோர் ஓட்டோவில் சேலத்துக்கு வந்தனர்.

கொண்டலாம்பட்டி அருகே ஓட்டோவை வழிமறித்த, பனமரத்துப்பட்டி ஒன்றிய பா.ம.க. நிர்வாகி சித்துராஜ் (வயது-35) ஆட்டோவில் கட்டியிருந்த ரஜனி ரசிகர் மன்றக்கொடியைக் கிழிததாராம்.

இது குறித்து கொண்டலாம்பட்டி பொலீஸில் புகார் செய்யப்பட்டது. பொலீஸார் வழக்குப்பதிவு செய்து சித்துராஜை கைதுசெய்தனர்.

# அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈராக்கில் கிளர்ச்சி தீவிரமடைகிறது

ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளுக்கு எதிரான கிளர்ச்சி தீவிரமடைந்திருக்கிறது.

அங்குள்ள இரு பெரும் பிரிவுகளான - சுனி மற்றும் ஷியா முஸ்லிம் மக்கள் - ஒரே சமயத்தில் ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்.



நேற்றுமுன்தினம் மட்டும் அங்கு நடந்த மோதல்களில் ஒரு டசினுக்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தீவிரமடைந்துவரும் கிளர்ச்சியால் இதுவரை 25இற்கும் அதிகமான ஆக்கிரமிப்புத் துருப்புகளும் நூறுக்கும் அதிகமான ஈராக்கியர்களும் உயிரிழந்துளளனர்.

ஷியா முஸ்லிம்களின் மதத் தலைவரான மொக்டடா சடரைக் கைதுசெய்வதற்கு அமெரிக்கப் படைகள் பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில், ஷியா முஸ்லிம்களின கிளர்ச்சி ஈராக்கின் பல நகரங்களுக்கும் பரவித் தீவிரமடைந்துவருகிறது.

தலைநகர் பக்தாத்துக்கு அறுபது மைல் மேற்கேயுள்ள ரமாடி நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் டசினுக்கும் அதிகமான அமெரிக்கப் படைகள் உயிரிழந்தன. அமெரிக்கத் துருப்புக்களின் கவசவாகனம் ஒன்று நாசமானது. இருபதுக்கும் அதிக அமெரிக்கத் துருப்புக்கள் காயமடைந்தன.

கிளர்ச்சியாளர்கள் பல அரச கட்டடங்களைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

பலூஜாவில் சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க ஒப்பந்தகாரர்கள் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் அவர்களது சடலங்கள் வீதிவழியே உதைத்தும், மிதித்தும், இழுத்தும் கொண்டுசெல்லப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டன. சுனி முஸ்லிம்களே இத்தாக்குதலை நடத்தினர் எனக் கூறப்படுகிறது.

இதன் சூத்திரதாரிகளைக் கைதுசெய்வதற்காக பலூஜா நகரைச் சுமார் ஆயிரத்து இருநூறு அமெரிக்கத் துருப்புக்கள் தற்போது சுற்றிவளைத்துள்ளன. அவற்றிற்கு எதிராகவும் நகரவாசிகள் சிறு ஆயுதங்களைக் கொண்டு தாக்கிவருகின்றனர். கடும் எதிர்ப்பை அமெரிக்கப் படைகள எதிர்கொள்கின்றன என்று கூறப்படுகிறது. நஜாப் நகரில் நிலைகொண்டுள்ள ஸ்பெயின் படைகள் மீதும் தாக்குதலகள் நடக்கின்றன. நஸிரியாவில் முகாமிட்டுள்ள இத்தாலிய இராணுவத்தினர் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாககுதலில் இரு துருப்புக்கள் கொல்லப்பட்டனர். சண்டை பலமணி நேரம் நீடித்தது.

நஸிரியாவின் பல வீதிகளும் அரச கட்டடத் தொகுதிகளும் கிளர்ச்சியார்கள் வசம் வீழ்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஈராக்கின் பல பகுதிகளிலும் நகரங்களிலும் ஒரே சமயததில் வெடித்திருக்கும் கிளர்ச்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது கூட்டுப்படைகளுக்கு மிகக் கஷ்டமான காரியம் என்று கூறப்படுகிறது.

கிளர்ச்சியாளர்களை அடக்குகின்றோம் என்ற பேரில கூட்டுப்படைகள் நடத்தும் பதில் தாக்குதல்களால் ஈராக்கியப் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனால் அவர்களின் கடும் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் கூட்டுப்படைகள இலக்காகிவருகின்றன எனக் கூறப்பட்டது.

# கட்டார் சிறையில் சதாம்

லண்டன், ஏப்.8

கட்டார் நாட்டில் அமெரிக்கா நிறுவியுள்ள இராணுவ முகாமில் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பத்திரிகையான 'தி இண்டி பெண்டன்ட்' நேற்று வெளியிட்ட செய்தி இதைத் தெரிவிக்கிறது.


கடந்த டிசெம்பரில் அமெரிக்கப் படைகளிடம் சிக்கிய சதாம், விசாரணைக்காக முதலில் வளைகுடாவுக்கு, அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டார் என்று அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

அதற்குப் பிறகு வளைகுடாவிலிருந்து மிக இரகசியமாக கட்டாருக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

# படுகொலைகளின் 10ஆம் ஆண்டுநிறைவு ருவாண்டா நாட்டில் அனுஷ்டிப்பு!

கிகாலி,ஏப்.8

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் 10ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறன்றது.



படுகொலைக்குள்ளானோரின் எச்சங்கள் மறு அடக்கம் செய்யப்படுகிறது.

1994ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி அப்போது அதிபராக இருந்த ஹுடு இனத்தைச் சேர்ந்த ஜுவனல் ஹபரிமானா பயணம் செய்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதில் அவர் கொலலப்பட்டார். இதனை டுட்ஸி இனத்தவரே செய்ததாகக் கூறி அவர்களை ஹுடு இனத்தவர்கள் கொன்று குவித்தனர். இதனையடுத்து இரு இனத்தவரும பரஸ்பரம் மற்றைய இனததவரைப் படுகொலை செய்தனர். சுமார் 8 லட்சம் பேர் அபபோது கொல்லப்பட்டனர். இறுதியாக ஜுலை மாதத்தில் டுட்ஸி இனத்தவரின் படை தலைநகரைக் கைப்பற்றியது. இதனையடுத்து சுமார் 20 லட்சம் ஹுடு இனத்தவர் அயல் நாடான கொங்கோவுக்கு இடம்பெயர்ந்தனர்.

உலகை உலுக்கிய இந்த மனிதப் படுகொலைகளின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் ருவாண்டாவில் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. இதில் ஆரம்ப நிகழ்வாக நேற்று நாடு முழுவதிலும் 3 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைநகர் கிகாலியில் உள்ள தேசிய உதைபநதாட்ட அரங்கில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் வெளிநாட்டுப் பிர திநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாகப் படுகொலையுண்டவர்களின் எச்சங்கள் கிகாலி மலை உச்சியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய நினைவிடத்தில் மறு அடக்கம் செய்யப்பட்டன.

இதேவேளை, ருவாண்டா படுகொலைகளைத் தடுக்க அப்போது ஐ.நாவும், சர்வதேச சமூகமும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டன என்றும் -

தற்போது இடம்பெறும் நினைவுநிகழ்வுகளுக்குக்கூட சிரேஷ்ட பிரதிநிதிகளை மேற்குலக நாடுகள் அனுப்பவில்லை என்றும் - ருவாண்டா அரசும், படுகொலைக்கு உள்ளானவர்களின் உறவினர்களின் அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன. (ஒ)

# ஆப்கானில் நிலநடுக்கம்

காபூல்,ஏப்.8

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில் உள்ள பதக்ஷான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை நில நடுக்கம் உணரப்பட்டது. இதேபோல, சீனா, தஜிகிஸ்தான், பாகிஸ்தான் எல்லைகளிலும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் பயந்து போன மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறித் திறந்த வெளிகளில் தஞ்சம் புகுந்தனர்.

ஊரையே உலுக்கிய இந்த நில நடுக்கம் ஒரு நிமிடம் நீடித்ததாக பாகிஸ்தானைச் சேர்ந்த வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போதுமான தகவல் தொடர்பு வசதியில்லாத பதக்ஷான் மாகாணத்தில் நில நடுக்கத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து உடனடியாகத் தகவல்களைப் பெற முடியவில்லை.

# 'டைட்டானிக்' உணவு விவரக் கையேடு ரூ. 82 லட்சத்துக்கு ஏலத்தில் விற்பனை

1912ஆம் ஆண்டு நடுக்கடலில் மூழ்கி வரலாறாகிவிட்ட 'டைட்டானிக' கப்பல் சம்பந்தப்பட்ட நினைவுப் பொருள்களுக்கு உலகில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அக்கப்பலில் முதல் முதலில் வழங்கபபட்ட உணவு விவரங்கள் அடங்கிய கையேடு ஒன்று லண்டனில் ரூ. 82 லட்சத்துக்கு ஏலம் போயிருக்கிறது.

தெற்குப் பிரிட்டனின் சவுதாம்ப்டன் துறைமுகத்திலிருந்து 1912 ஏப்ரலில் அந்தப் பயணிகள் கப்பல் புறப்பட்டுச் சென்றது. நியூபவுண்ட் லாண்ட் கரைக்கு அப்பால் நடுக்கடலில் பெரும் பனிப்பாறையில் மோதி அக்கப்பல் மூழ்கியது. அதனோடு சேர்ந்து ஏராளமானோர் மாண்டனர். அதிர்ஷடசாலிகள் சிலர் உயிர் பிழைத்தனர். அச்சமபவம் திரைப்படமாகவும் தயாரிக்கபபட்டு பலகோடி டொலர் லாபத்தைக் குவித்தது.

அக்கப்பலில் இரு மீட்கப்பட்ட நினைவுப் பொருள்கள் பிரிட்டிஷ் டைட்டானிக் சங்கக் கூட்டத்தில் ஏலத்தில் விற்கப்பட்டன. அதில், அக்கப்பல்ல் முதல் முதலாக வழங்கப்பட்ட உணவு விவரக் கையேடு ரூ. 82 லட்சத்துக்கு ஏலம் போனது. டைட்டானிக் சம்பந்தப்பட்ட நினைவுப் பொருளகளிலேயே இதுதான் அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

டைட்டானிக் கப்பலில் பணியாளாக இருந்த தொமஸ் முல்லின் எனபவருக்குச் சொந்தமான உடைந்து போன வெள்ளிக் கடிகாரம், தோல் உறையுடன் கூடிய குறிப்பேடு, பணியாளர் அடையாள அட்டை, உணவு விவர ஏடு ஆகியவை ஏற்கனவே ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன. மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்து உறைந்து போன நிலையில் மீட்கப்பட்ட பணியாளர் தொமஸ் முல்லின் சட்டைப்பையில் இருந்தவை இப்பொருள்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தேவை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்களால் புதிதாக அமைக்கப்பெற்ற பெண்கள் உணவு அறைக்கு உணவு பரிமாற (சப்ளை) பெண்கள் தேவை. ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும். பின்வரும் விலாசத்திற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் நேரில் சமுகம் தரவும்.

**மலாயன் கபே**

(19-13-17-30) 36, 38, பெரியகடை, யாழ்ப்பாணம். (30557)


# 180ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 19 – 11 – 1963

மறைவு 13 – 10 – 2003



**அமரர் ஐயாத்துரை இராசகுலசிங்கம் (சந்திரன்)**

(தபால் ஊழியர் - கொடிகாமம்)

திதி:திருதியை

தாளாத துயரீந்தே தந்தை போனார்
தந்தையென நின்ற தலை அண்ணன் போனார்
மீளாத சோகமொடு நின்ற எங்கள்
மீதென்ன பிழைகண்டு நீயும் போனாய்
ஒரு கூட்டுக் கிளியாக அறுவர் வாழ்ந்தோம்
இன்று எமது கூடுடைந்து நால்வரானோம்
பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயை
காலமெல்லாம் கண்கலங்க வைத்து எங்கே சென்றாய்?
உன் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*மந்துவில் மேற்கு, கொடிகாமம்.* (30556)(13-17-30)

உன் பிரிவால் வாடி நிற்கும்
**அன்பு அம்மா மற்றும் சகோதரர்கள்.**

# 31ஆவது நாள் நினைவு அஞ்சலி

மண்ணில் 02 – 09 – 1934

விண்ணில் 09 – 03 – 2004



**அமரர்**
**வைரமுத்து நடராசா (பொன்னுத்துரை)**

குடத்தனை

(அன்னார் கடந்த 9.3.2004 அன்று காலமாகி இந்தியா - பெசன் நகர் சுடுகாட்டில் 10.3.2004 அன்று பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது)

அன்னாரின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (8.4.2004) வியாழக்கிழமை இந்தியா, திருவான்மியூரில் நடைபெறுகின்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்புடையோர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

T.P:00919840428168 **அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்.**

(30362)(13-17-30)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
**சோமசுந்தரம் நடராசா**

வையத்துள் அறிமுகம் 21.09.1921

தெய்வத்துள் சங்கமம் 09.03.2004

" மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீர்
மறையாத அன்புதனை மழையாய் பொழிந்தீர்
புண்ணியம் பலசெய்து புகழ்உடம்பு பெற்றீர்
புனிதனாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீர் "

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகிறோம் !

அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (08/04/2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். எனவே இந்நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரச்செய்தி கேட்டு எமது இல்லம்நாடி வந்து எமக்கு ஆறுதலும், தேறுதலும் கூறிய அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளாலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதயசுத்தியுடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

21/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.

*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## சாரணருக்கான பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.8

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தின் சாரணர் அணிததலைவர், சாரணத் தலைவர் ஆகியோருக்கான பயிற்சிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சிகள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## கோப்பாய் சமுர்த்தி வங்கி ரூ. 35 லட்சம் திரட்டியது

கோப்பாய்,ஏப்.8

கோப்பாய் சமுர்த்தி வங்கிச் செயலகத்தினால் அதன் அங்கத்தவர்கள் மூலம் 35 லட்சம் ரூபா பணம் இதுவரையில் திரட்டப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக செயலகத்தின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியின் மூலம் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற பயனாளிகளுக்குச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன், விவசாய உதவிக்கடன் என்பன வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும தெரிவித்துள்ளார். (ம-10-72)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி,ஏப்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## உசன் மகா வித்தியில் ஒலி, ஒளிப்பதிவு செயற்பாட்டறை

தென்மராட்சி,ஏப்.8

உசன், இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஒலி, ஒளிப்பதிவு செயற்பாட்டறை அமைக்கப்படவுள்ளது.

இதற்கென மாகாண கல்வி அமைச்சு ஒரு லட்சத்து 96ஆயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள 12 பாடசாலைகளில் உயர்தர வகுப்பு ஆய்வு கூடம் மற்றும் ஒலி, ஒளிப்பதிவு செயற்பாட்டறை ஆகியவை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் இந்தப் பாடசாலையும் அடங்கும். (ம-117)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ். மாநகர சபைக்குட்பட்ட நல்லூர், வண்ணார்பண்ணை பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் சிகிச்சை நிலையத்திலும், முற்பகல் 11 மணிக்கு நல்லூர் மூத்த விநாயகர் ச.ச.நிலையத்திலும், பிற்பகல் 2 மணிக்கு சங்கிலியன பொதுப்பணி மன்றத்திலும் -

எதிர்வரும் 21ஆம் திகதி வண்ணார்பண்ணை வள்ளுவர் ச.ச. நிலையத்தில் முற்பகல் 11 மணிக்கும் காமாட்சி ச.ச. நிலையத்தில் பிற்பகல் 2 மணிக்கும் -

22ஆம் திகதி ஆத்திசூடி ச.ச.நிலையத்தில் காலை 8.30 மணிக்கும், நீராவியடி ச.ச.நிலைத்தில் முற்பகல் 11 மணிக்கும் வேம்படி ச.ச.நிலையத்தில் பிற்பகல் 2 மணிக்கும் -

28ஆம் திகதியல் கலைவாணி ச.ச.நிலையத்தில் காலை 8.30 மணிக்கும், ஒஸ்மாணியக் கல்லூரி அருகில முற்பகல் 11 மணிக்கும் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது. (ம-ரி)

## கண்ணாடிகளைப் பெறலாம் என அறிவிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த மாதம் உசன், கைதடி ஆகிய பகுதிகளில் நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமில் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் பின்வரும் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திதகி ஞாயிற்றுக்கிழமை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும், 18ஆம் திகதி கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ம-117)




உ
சிவமயம்

இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள் யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு மூன்றாவது தடவையாக வருகை தந்துள்ளார்கள்.

**திரு. P.T.R. அவர்கள்**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றம் இல்லையா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
எதுவாயிருந்தாலும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

(30582)(14-13-17-30)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1992 – 12 – 07

மறைவு 2001 – 04 – 09



**செல்வன் தவேந்திரன் கார்த்தீபன்**

08.04.2004

*பண்பால் சிறந்து விளங்கிய கார்த்தீபனே!
அன்பால் உன்னை அரவணைத்து நிற்கின்றோம் தீபா!
ஆண்டுகள் மூன்று மறைந்தோடிப் போனதோ?
நீ இருந்த வாழ் நாளில் நிம்மதியாய் வாழ்ந்தோம்!
நீ இல்லா உலகிலே நிதம் கலங்கி நிற்கிறோம்
உன் நினைவுகள் எம்முன் நிலைத்தேயிருக்கும்!*

*சந்தை வீதி. இமையாணன் மேற்கு. உடுப்பிட்டி.* (30578)(13-17-30)

**அ.தவேந்திரன் (சோக்கர்) தகப்பன்.**

# பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 – 09 – 1969

உதிர்வு 08 – 04 – 1987



**அமரர் சற்குணநாதன் நந்தகோபன்**

மீசாலை மேற்கு

நாநிலத்தில் வந்துதித்த நந்தகோபனே!
மீசாலைப் பதிவிளங்கிடவே வந்துதித்து
பேசாமல் நீ சென்றதனால் பெற்ற மனம் வேகுதடா!
உன் பாச முகம் பார்த்து பதினேழு ஆண்டுகள் ஆனதடா!
நேசமாய் உன் நினைவு எம் நெஞ்சை வாட்டுதடா!

உன்பிரிவால் துயருறும்,
**அம்மா, அப்பா, அக்காமார், மூவர் தம்பி தங்கை மகன், மருமக்கள், நண்பர்கள், உறவினர்கள்.**

*"பிருந்தாவனம்", மீசாலை மேற்கு, மீசாலை.* (30501)(13-17-30)

தகவல்:
லயன் சி.சற்குணநாதன் R.t.d. T.A-(IRR)

# 2ஆம் வருட இதய அஞ்சலி

தோற்றம் 20 – 03 – 1939

மறைவு 01 – 04 – 2002



**அமரர் தாமோதரம்பிள்ளை ஜெயசிங்கம்**

(திருநெல்வேலி)
(Plant Manager, Asbestos Cement Industries Ltd, Ratmalana)

திதி: 08.04.2004

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"*

வையகந் தன்னில் வாழ்வாங்கு வாழ்ந்து
எமக்கு வழி காட்டிய எம் அன்புத்தெய்வமே!
நீங்கள் இறைவன் இணையடி சேர்ந்து -
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எங்கள் நெஞ்சத்துள் நினைவாக
வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களை.

என்றென்றும் நினைந்து இறைவனைப் பிரார்த்திக்கும்:
**- அன்பு மனைவி, மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள். உறவினர்கள்.**

(30581)(13-17-30)

உதயன்

# இந்தியத் தூதுவரின் பங்களிப்பு என்ன?

இலங்கை விவகாரத்தில் அதிகப் பிரசங்கித்தனமாக மூக்கை நுழைக்கும் தனது செயற்பாட்டை இந்தியா கனகச்சிதமாக நிறைவேற்றிக்கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பொதுத்தேர்தல் முடிந்து, எந்தத்தரப்பும் அறுதிப் பெரும்பான்மை பெறாமல் தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டுள்ள பின்னணியில், தனது கைவரிசையைக் காட்டத்தொடங்கியிருக்கின்றது இந்தியா. குறிப்பாகக் கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகம் இதுவிடயத்தில் அளவுக்கு அதிகமான தலையீட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது.

எந்தத் தரப்புக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காமல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மூத்த பிரமுகர்கள் தங்களுக்குள் ஓடித்திரிந்து பேச்சுக்களில் ஈடுபட்ட சமயம், அதற்கு இணையாக இந்தியத் தூதுவரும் கட்சித் தலைவர்களிடையே மாறி, மாறி ஓடித்திரிந்து பேசியதுதான் வியப்புக்குரியது.

இந்தியத்தூதுவர் நிருபன் சென்னுடன் பொதுவாகக் குசலம் விசாரித்துப் பேச்சு நடத்தினோம் என்று மட்டுமே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கூறினாலும் -

புதிய பிரதமர் யார் என்பதைத் தெரிவு செய்வது தொடர்பாகவும், ஆட்சி அமைக்கத் தேவையான 113 எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டுவது தொடர்பாகவும் பலமுனை முயற்சிகள், பல தரப்பிலும் மும்முரமாகவும் உக்கிரமாகவும் நடந்துகொண்டிருந்த சமயம், இ.தொ.காவின் மூத்த தலைவர்கள் பலரோடும் பின்னர் அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் பூட்டிய அறைக்குள்ளும் இந்தியத் தூதுவர் நிருபன் சென் பேச்சு நடத்தினார் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அது முடிந்த கையோடு, ஜனாதிபதி மாளிகைக்கு விரைந்த இந்தியத்தூதுவர், அங்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசினார்.

அந்தச் சந்திப்பு முடிந்தவுடன் தனது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களைச் சந்தித்த ஜனாதிபதி "பிரச்சினை முடிந்தது, இ.தொ.கா. எங்களுக்கு ஆதரவு தரும்" என்று அவர்களுக்கு அறிவித்தார்.

கட்சியின் மூத்த தலைவர்களோடு நடந்த அந்தச் சந்திப்பின்போதுதான் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் சமரசமும் எட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

இதையடுத்து அடுத்தநாள் காலை புதிய பிரதமர் பதிவியேற்றதும் விரைந்து சென்று அவருக்கு முதல் வாழ்த்துச்சொன்ன முதல் வெளிநாட்டு இராஜதந்திரி இந்தியத்தூதுவர் நிருபம் சென்தான். அரைமணி நேரம் புதிய பிரதமருடன் அவர் தனியாகவும் உரையாடினார்.

இதன் பின்னர்தான் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா அதிக அளவில் பங்காற்றவேண்டும் என்ற கோரிக்கையைப் புதிய பிரதமர் முன்வைத்தார்.

இவையனைத்தும் நடந்த சம்பவங்கள். மூடிய அறைகளுக்குள் நடந்த பேச்சுகளின் விவரமோ, தொலைபேசிக் கலந்துரையாடல்களில் பரிமாறப்பட்ட விடயங்களின் விவரமோ வெளியில் யாருக்கும் தெரியாது.

இந்நிலையில், "எமது அயல்நாட்டின் உள்விவகாரங்களில் நாம் தலையிடமாட்டோம்; தலையிடவுமில்லை" - என்ற சாரப்பட இந்தியத்தூதுவர் வெறுமனே கூறிய கருத்துக்களை நாட்டுமக்கள் எவ்வளவு தூரம் நம்புவார்கள் என்பது சந்தேகமே.

நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல; நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். (Justice not only be done but also appear to be done) என்ற ஒரு வாக்கியம் உள்ளது.

அது போன்று, இந்தியத் தூதரின் கூற்று வெறுமனே வாய்ச்சொல்லாக இல்லாமல் அதை நியாயப்படுத்தி வெளிப்படுத்தும் விதத்தில் அவரின் செயற்பாடுகளும் அமையவேண்டும். புதிய அரசை ஸ்தாபிப்பதற்கான திரைமறைவுச் செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்றவேளை இந்தியத் தூதர் நடந்துகொண்ட விதம் அப்படி அமையவில்லை என்பதுதான் உண்மை.

ஈழத்தமிழர் தரப்பை நெருக்குதலுக்குள் உள்ளாக்குவதற்காகத் தெற்கில் பலமான அரசு அமைய வேண்டும் என்று சில இராஜதந்திரிகள் விரும்புகின்றார்கள் போலும்.

ஈழத்தமிழரின் ஐக்கியமும் புலிகளே, அவர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதும் இத்தேர்தல் மூலம் நிருபிக்கப்பட்டதால் எழுந்த எரிச்சல், எதிர்த்தரப்பைப் பலப்படுத்த அவர்களைத் தூண்டுகின்றது போலும்.

# நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து அல்லைப்பிட்டியில் கெடுபிடி அதிகரிப்பு

ஊர்காவற்றுறை,ஏப்.8

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் பொதுமக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் தீவிரமடைந்துள்ளன.

யாழ். நகரில் இருந்து தீவுப்பகுதியினுள் நுழையும் வாகனங்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் மற்றும் பொதிகள் என்பன அண்மைக் காலம் வரை சோதனையிடப்பட்டு வந்தன. எனினும், அதில் தளர்வுப்போக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தற்போது அது தீவிரமடைந்துள்ளது.

கடந்த சில நாள்களாகத் தீவுப்பகுதியில் இருந்து யாழ். நகரை நோக்கிச் செல்லும் வாகனங்கள அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டுப் பயணிகள் தீவிரமாகச் சோதனையிடப்படுகின்றனர்.

அதேபோன்று, கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையின் நுழைவாயிலில் நிலைகொண்டுள்ள கடற்படையினரும் சோதனைக் கெடுபிடிகளை தீவிரமாக்கியுள்ளன. இறங்குதுறையை நோக்கிச் செல்லும் வாகனங்கள் மட்டுமன்றி பயணிகளது அடையாள அட்டைகளும் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன் அவர்களது பொதிகளும் சோதனையிடப்பட்டு வருகின்றது.(ம-16)

# தமிழ்க் காங்கிரஸிலிருந்து சி.வீ.கே.சிவஞானம் விலகல்!

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவருமான சி.வீ.கே.சிவஞானம் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் தன் பொறுப்புகளில் இருந்தும் இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவர் விருப்பு வாக்குக் குறைவாகப் பெற்றமையால் (25,954) நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை. அதேசமயம், இவரது கட்சியைச் சேர்ந்தவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 60,768 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

இந்த நிலையில், தனது கட்சி தனது வெற்றிக்காகப் பாடுபடவில்லை என்று கடும் சீற்றமடைந்திருந்த சிவஞானம் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தான் இராஜினாமாச் செய்வதாகப் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நேற்றுக் கடிதம் அனுப்பிவைத்தார்.

அக்கடிதத்தில், தேர்தலில் தான் வெற்றி பெறுவதற்குக் கட்சியும் அதன் நிர்வாகிகளும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சி.வீ.கே.சிவஞானம் முதற்றடவையாகப் போட்டியிட்டவர். அப்போதும் சுமார் 15 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவில்லை. இரண்டாவது தடவையாக இந்த முறையும் அவர் தோல்வியடைய நேரிட்டுள்ளது.

தனது தோல்விக்குக் கட்சி நிர்வாகிகளின் பாராமுகமே காரணம் என்று அவர் உறுதியாக நம்புகின்றார். (ம)

2000 ஆம் ஆண்டு நடந்த

# பொதுக் கலைமாணி பகுதி - I முடிவுகள் இந்த மாத நடுப்பகுதியில் வெளியாகும்

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவினால் 2000ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுக் கலைமாணி பகுதி -I பரீட்சை முடிவுகளை இம்மாத நடுப்பகுதியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2000ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இப்பொதுக் கலைமாணிப் பரீட்சை முடிவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்து பகுதி - I பரீட்சை முடிவுகள் வெளியிடுவது இடைநிறுத்தப்பட்டன.

பரீட்சை எழுதிய மாணவர்கள் தமது விடைத்தாள்களில் உரிய முறையில் சுட்டெண் இடாமை மற்றும் வேறு பல காரணங்களால் பெறுபேறுகளை வெளியிடுவது தாமதமானது என்று வெளிவாரிப் பிரிவின் அதிகாரி தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட பொதுக்கலைமாணி பகுதி- II பரீட்சைப் பெறுபேறுகள் முடிவுகள் எதிர்வரும் ஓகஸ்ட மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-6)

# சுட்டுத் துண்டு மோசடியில் ஈடுபட்ட வர்த்தகருக்கு அபராதம்

வலி.தெற்கு,ஏப்.8

சுன்னாகம் நகரப் பகுதியில் சுட்டுத்துண்டு மோசடிக் குற்றத்துக்காக தேநீர்க்கடை உரிமையாளர் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மூவாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் நகரப்பகுதியில் சுகாதாரப் பரிசோதனையில் ஈடுபட்ட யாழ்ப்பாண மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கு.பத்மகுமார் ஆகியோர் சுன்னாகம் பஸ்நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள தேநீர்க் கடையொன்றில் பழுதடைந்த பிஸ்கட்டுகள் விற்பனைக்கு வைகதப்பட்டிருந்தமையை கண்டுபிடித்தனர்.

விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த பிஸ்கட்டின் மேல் உறை மாற்றப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. உள்ளடக்கப்பட்ட பிஸ்கட்டின் உறை வேறாகவும், பிஸ்கட்டுகள் பழுதடைந்த நிலையிலும் காணப்பட்டமை பரிசோதனைகளின்போது தெரியவந்தது.

இதுதொடர்பாக, மேற்படி தேநீர்கடை உரிமையாளர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்கத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் சுட்டுத்துண்டு மோசடிக் குற்றத்தின் கீழ் தேநீர்க்கடை உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-152)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

மட்டக்களப்பு,ஏப்.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் காரணமாக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் வீரசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

## நாளை

பங்குனி 27
வெள்ளிக்கிழமை
(09.04.2004)
திதி : சதுர்த்தி
பகல் 9.03 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
பகல் 2.03 வரை
பெரிய வெள்ளி
சுபநேரம்: 6.06 - 7.36
ராகுகாலம்: 10.36 - 12.06
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறையில் ஆடிய பின்னரே அம்பலத்தில் ஆடவேண்டும்.

# மருதங்கேணிச் சந்தையைப் புனரமைக்க நடவடிக்கை

செம்பியன்பற்று,ஏப்.8

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் மருதங்கேணி பொதுச் சந்தை புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இருபது இலட்சம் ரூபா செலவில் பொதுச்சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளது. மரக்கறிச் சந்தை, மீன்சந்தை என இரு பிரிவுகளாக அமைக்கப்படவுள்ளது.

கடந்தகாலப் போர் அனர்த்தங்களால் சேதமடைந்த இப் பொதுச் சந்தை தற்போது ஒரு தற்காலிகக் கொட்டிலில் இயங்கிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இப்பொதுச் சந்தை புனர்நிர்மாணிக்கப்படவுள்ளது. வடமராட்சி கிழக்கிற்கு இருக்கும் ஒரே சந்தை இதுவாகும். (ம-36)

# கஞ்சா பயிரிட்டவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஓயார் சின்னக்குளம் பகுதியில் கஞ்சாசெடிகளைப் பயிரிட்டார் எனக் கூறப்படும் நபர் ஒருவரை வவுனியா பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 20ஆம் திகதிவரை விள்க்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் உத்தரவு இட்டார். வழக்கு விசாரணைக்காக ஓயார் சின்னக்குளம் பகுதிக்குச் சென்ற பொலீஸார் குறிப்பிட்ட நபரின் வீட்டில் இருந்து கஞ்சாவைக் கைப்பற்றினர். இதன் பின்னர் பொலீஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்டபோது கஞ்சா பயிரிட்ட நபர் தொடர்பான தகவல் தெரியவந்தது என்று கூறப்பட்டது. (ம-164)

## சாயி சிந்தனை

### இறைவனின் அன்பை அனுபவியுங்கள்



பக்தி என்பது பற்றுதல், வெறுப்பு, அசூயை இவற்றிற்கு அப்பாற்பட்டது. ஆடம்பரமாக வாழ்வதும், பொறாமைப் படுவதும், தன் பக்தியைப் பறை சாற்றுவதும் பக்திக்கு அழகல்ல. அவன் பக்தனே இல்லை! பக்தி அவன் சமீபத்தில் கூட வராது.

இந்த தீய வழக்கங்களின் பிடியிலிருந்து விலகி, ஆனந்தமாக இறைவனின் அன்பை அனுபவிக்கவேண்டும்! அதுதான் உண்மையான பக்தி.

அப்போதுதான் "நித்யானந்தம், பரக சுகதம், கேவலம், ஞானமூர்த்திம், த்வந்தா தீதம், கஹனசத்ருசம், தத்வமஸ் யாதி லஷ்யம், ஏகம், நித்யம், விமலா, அசலம், ஸர்வதீ, சாட்சிபூதம்! இந்தநிலையில் தூய இதயத்தோடு தூய எண்ணங்களை நிரந்தரமாக்கிக் கொண்டு உயர்ந்த அமைதியை அனுபவிப்பதுதான் பக்தி.

(ஆதாரம்: சனாதன சாரதி)

## பிரத்தியேக வகுப்புக்கள்!

மாணவனே பயம் எதற்கு?
இறந்தகாலம் உனைப் பயங் கொள்ளச் செய்கிறதா?
பயம் கொள்ளாதே அதில் பாடம் படித்துக் கொள்
எதிர்காலம் உனக்குச் சவாலாக இருக்கிறதா?
கலங்காதே, உறுதிகொள்
உன் மேல் நம்பிக்கை கொள்
எங்கள் மேல் நம்பிக்கை வை
உனது எதிர்காலத்தை நாங்கள் ஒளிமயமாக்கித் தருகிறோம் ~ உறுதியாக

## மாதுரி தனியார் கல்வி நிலையம்

பிரத்தியேக வகுப்புக்கள் (அமைப்பாளர் திரு.கண்ணன்)
29, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
கணக்கியல் கடந்தகால பரீட்சை வினா - அலகு ரீதியான மீட்டல்கள் (1979-2003 வரை)
A/L 2006 - வர்த்தகப் பிரிவுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
O/L பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்: 08.04.2004

**சாதாரண தரம்**



கணிதம்
விஞ்ஞானம்
ஆங்கிலம்
வர்த்தகம்
தமிழ்
சமயம்
சமூகக்கல்வி

**உயர்தரம்**

**கலைப்பிரிவு**
தமிழ்
இந்துநாகரிகம்
அளவையியல்
இந்துசமயம்
நாடகமும் அரங்கியலும்

**வர்த்தகப் பிரிவு**
கணக்கியல்
பொருளியல்
வணிகக்கல்வி



**ஆண்டு 5 இற்கான புலமைப் பரிசில் வகுப்புக்கள்**

☞ ஒவ்வொரு வகுப்பிலும் 10 மாணவர்கள் மட்டுமே
☞ ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனம்
☞ சிறந்த பெறுபேறுக்கு உத்தரவாதம்

*"கடுமையான பயிற்சி இலகுவான பரீட்சை"*

(30573) (34-21-16-11)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்த மருத்துவத்துறையில் அமைந்துள்ள பெண்கள் விடுதி புனரமைப்பு வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் எம் 6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்களை பெறத் தகுதி உடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடம் இருந்து 28.04.2004ஆம் திகதி வரை செல்லுபடியான பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்புகளுக்கான தொகையை பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1) மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 60,000/=
2) மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 1,000/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 11.05.2004 அன்று காலை 10.00 மணிக்கு முன்னர் *தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல்வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல்வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கிளையில் வழமையான வேலைநேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலனை செய்யமுடியும்.

த.பெ.57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
06.04.2004

(C/34100)(34-21-11-16)

## திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

வலிகாமம் தெற்கு,ஏப்.8

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் தரம் 4, 5 மாணவர்களுககான வலய மட்டத்திலான திருக்குறள் மனனப் போட்டிகள் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விவரம் பின்வருமாறு

முதலாம் இடம்: க.கயவாணி ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்.

இரண்டாம் இடம்: கே.கௌசிகன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

மூன்றாம் இடம்: பு.பிரியங்கா மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம் (ம-152)

## மருதடியான் மலர் வெளியீட்டு விழா

வலிகாமம் தெற்கு,ஏப்.8

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்டு வரும் அறநெறிப் பாடசாலையினர் வருடம் தோறும் வெளியிட்டு வரும் 'மருதடியான் மலர்' இவ்வருடம் அமரர் கவிமாமணி பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயர் ஞாபகார்த்த சிறப்பு இதழாக வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நூல் வெளியீடு இடம்பெறும்

இந்நூல் வெளியீட்டு விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஈ.சுப்பிரமணிய சர்மா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இந்துசமய விவகார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபர் சுடர் இ.மகேந்திரன் நிகழ்த்துவார்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சைவ சமயப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகள் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மாவினால் இவ்விழாவின் போது வழங்கப்படும். (ம-152-135)

## ஆசிரியர்களுக்கு விடுமுறைக்கால விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.8

நீர்வாழ் உயிர்வளத் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான விடுமுறைக்கால விசேட வகுப்புகள் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒழுங்கில் நடைபெறவுள்ளன என்று பாடநெறியின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சகலரையும் இதில் கலந்துகொள்ளுமாறும மேலதிக விவரங்களுக்கு யாழ்.கல்வி வலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.8

நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புவியியற் துறை விரிவுரை மண்டபம் இரண்டில தேர்தல் முடிவுகள் தொடர்பான கருத்துரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அன்னவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-6)

## உண்டியல் உடைத்துத் திருட்டு

கோப்பாய்,ஏப்.8

கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள அடப்பந்தாழி வைரவர் ஆலய உண்டியல் அடிக்கடி உடைக்கப்பட்டு அதிலிருக்கும் பணம் திருடப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் ஐந்து தடவைகளுக்கு மேல் இவ்வாறு உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

அடிக்கடி இவ்வாறு நடைபெறுவதால் ஒரே நபர்களுக்கு இத்திருட்டில் தொடர்பு இருக்கக்கூடும் என்று மக்கள் ஐயம் தெரிவிக்கின்றனர். (ம-10)

## குடும்பஸ்தர் மீது வீடு புகுந்து தாக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.8

குடும்பஸ்தர் ஒருவரைக் கும்பலொன்று வீடுபுகுந்து தாக்கிய சம்பவம் கடந்த சனிக்கிழமை வரணிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வரணி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானம் என்ற குடும்பஸ்தரே இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளான அவர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நபர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைக்கொடிகாமம் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஒ-9)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**08-04-2004**



யாழ்ப்பாணம், சுண்டிக்குளியைச் சேர்ந்த
**சான்ரன் - மாலினி**
தம்பதிகளின்
செல்வப்புதல்வன்

## கபிஷன்

தனது முதலாவது பிறந்தினத்தை இன்று (08.04.2004) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

கபிஷனை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார், பளையில் வசிக்கும் பூட்டி, கனடாவில் வசிக்கும் தாத்தா, பாட்டி, அன்ரிமார், பிரான்சில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், தங்கை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**செ.மார்க்கண்டு (அம்மப்பா)**
*இல.11, சோமசுந்தரம் லேன், சுண்டிக்குளி.*
யாழ்ப்பாணம். (30507)(34-21-16-11)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

**இதோ பாவியுங்கள்!**

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும். கறுப்பாகவும். அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கோள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-2[illegible]

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-34194) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)



சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு

## தணிஸ் ரெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

## மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| பட்டசில்க் பிறின்ட் | 120/= | 60/= |
| பொக்ஸ் சேட் | 600/= | 400/= |
| றடோ சேட் | 600/= | 400/= |
| இந்தியன் பிளவ்ஸ் | 600/= | 300/= |
| பிளவ்ஸ் | 300/= | 200/= |
| T.சேட் | 500/= | 300/= |
| சூட்டிங் | 350/= | 250/= |
| சாறி | 450/= | 350/= |
| இந்தியன் சாறி | 800/= | 500/= |
| பினபோம் | 750/= | 250/= |
| கவுன் | 750/= | 400/= |
| இந்தியன் சூட் | 500/= | 250/= |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

*மற்றும் சேட், T.சேட், சூட்டிங், வேட்டி ,இந்தியன் சாறி, ஸ்கேட் அன் பிளவ்ஸ், பஞ்சாபி; கவுண், சூட், பிறின் துணிகள், பிளவுஸ் பீஸ் துணிகள் மற்றும் அன்பளிப்புப் பொருள்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள*

நீங்கள் நாடவேண்டிய இடம்:

## தணிஸ் ரெக்ஸ்

நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(30568) (21-11-16)

# குடாநாட்டின் கல்விசார் பிரச்சினைகளும் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களும்

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட சமூக, கலை, கலாசார, பொருளாதார, கல்வி, வாழ்வியல் நிலைக்கும் சமகால மக்களின் சமூக கட்டுமானத்துக்கும் இடையில் பாரிய இடைவெளி தோன்றியிருக்கிறது. எமது சமூக அமைப்புப் பல்வேறு அடிப்படையில் இலங்கையின் ஏனைய பிரதேச அடிப்படையிலும், வேறு பல விடயங்களிலும் பின்னோக்கியே உள்ளது. இதன் அடிப்படையில் கடந்தகால இன முரண்பாடுகளும் அதனால் விளைந்த போரும் எமது வடக்கு - கிழக்கு பிரதேசம் உட்பட, குறிப்பாக யாழ். மாவட்டமும் கல்வியும் என்ற மையத் தளத்தில் பின்னிலை நோக்கிய




விருத்தியிலேயே விளங்குகின்றது என்பதனை ஒரு தரவு அடிப்படையிலும், ஒப்பீட்டு ரீதியிலும் பல்வேறு கல்விசார் பிரச்சினைகள் என்ற அடிப்படையிலும் இக்கட்டுரை ஆராய முற்படுவதுடன், இவற்றினது சமூக, பொருளாதார, அரசியல், கலை அம்சங்களின் பின்னணியினையும் ஆதாரமாகக்கொண்டு கல்விசார் இடர்பாடுகளும் அவற்றிற்கான சமகால அமுலாக்கத் திட்ட நடைமுறைகளும்,

## அட்டவணை I

| செயற்படுகின்ற பாடசாலைகள் | | | | | | | | | | | தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வலயம் | நிரந்தர இடம் | | | | | தற்காலிக இடம் | | | | | | | | | |
| | 1AB | 1C | II | III | மொத்தம் | 1AB | 1C | II | III | மொத்தம் | 1AB | 1C | II | III | மொத்தம் |
| யாழ்ப்பாணம் | 14 | 11 | 30 | 38 | 93 | 00 | 00 | 05 | 04 | 09 | 02 | 01 | 01 | 09 | 13 |
| வலிகாமம் | 12 | 12 | 28 | 65 | 117 | 03 | 01 | 06 | 04 | 14 | 00 | 00 | 03 | 17 | 20 |
| தென்மராட்சி | 00 | 00 | 03 | 05 | 08 | 03 | 08 | 19 | 21 | 51 | 00 | 00 | 00 | 08 | 08 |
| வடமராட்சி | 10 | 05 | 25 | 25 | 65 | 00 | 02 | 06 | 03 | 11 | 00 | 00 | 01 | 05 | 06 |
| தீவகம் | 04 | 07 | 18 | 14 | 43 | 00 | 00 | 01 | 04 | 04 | 00 | 01 | 00 | 29 | 29 |
| | 40 | 35 | 104 | 147 | 326 | 06 | 11 | 37 | 35 | 89 | 02 | 01 | 05 | 68 | 76 |

(நன்றி: யாழ். மாவட்ட செயலகம் 2001)

**இராஜேஸ்வரன்**

இலங்கையின் கல்விசார் தேசிய கொள்கையும் குடாநாட்டு கல்வியில் அதன் செல்வாக்குப் பற்றியும் இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

### இனங்காணப்பட்ட பிரச்சினைகள்

★ இன முரண்பாடும் அதனால் ஏற்பட்ட போரியல் தாக்கத்தினால் கல்விசார் பௌதிகக் கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்புகளும்.

★ சமகாலத்தில் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் அதிகளவில் மூடுவிழா காணும் பாடசாலைகள்.

★ இனரீதியான பாகுபாடும் இதனால் அரசியல் சார் செல்வாக்குக் கல்வியில் பிரயோகிக்கப்படல் தீவிரமடைந்ததுடன் இதன் விளைவால் தேசிய கல்விக் கொள்கையின் நோக்கம் பூரணப்படுத்தப்படாமை.

★ உயர் பாதுகாப்பு வலயம் என்ற அடிப்படையில் பாடசாலைகள் இயங்க முடியாமை.

★ போரின் தாக்க விளைவினால் மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள பல்வேறு உடல், உளப் பாதிப்புகள்.

★ பல்கலைக்கழக அனுமதியும், மாவட்ட ரீதியான தரப்படுத்தல், கோட்டா முறையிலான அனுமதி அமுலாக்கமும் ஏற்படுத்திய பாதிப்புகளும்.

★ பாடசாலைகளில் தொடர்ந்து கல்வியைப் பெறாமல் இடைவிலகும் மாணவர் பிரச்சினை அதிகரித்து வருதல்.

★ பாடசாலைகளில் கற்றல், கற்பித்தலில் ஈடுபட ஆசிரிய வளம் போதியளவு காணப்படாமை.

பிறப்பு வீத வீழ்ச்சியும், நகர்ப்புற பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் பெற்றோர் நாட்டம் கொள்ளுதல் தன்மை தீவிரமடைந்து காணப்படுதலும்.

★ கல்வி அமைப்புக்கும் வேலை வாய்ப்புக்கும் இடையில் ஒத்த தன்மையின்மை காணப்படுதல்.

★ முன்பள்ளிசார் அமைப் பொழுங்குகள் திருப்தியின்மையும், குழந்தைகளின் முன்பிள்ளைப் பருவ விருத்திப் பாதிப்புகளும் அல்லது குறைபாடுகளும்.

★ மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதில் பணம் (டொனேசன்), சலுகைகள் அதிகளவில் பிரயோகப்படுத்தல்.

★ கல்விசார் நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள், அதிகாரப் போட்டி மற்றும் பழிவாங்கும் சம்பவங்களும் அதிகரித்து வருதல்.

★ பெற்றோரின், ஆசிரியரின் பரீட்சை நோக்கிய வழிகாட்டுதல்களும், போட்டி முறையில் அமைகின்ற ஆசிரியத்துவமும் கல்வியில் சில எதிர்நிலையான இடர்பாடுகளை ஏற்படுத்தியுள்ளமை.

★ தனியார் கல்வி நிலையங்கள் மீது ஆசிரியர்கள் அதிகளவு நாட்டம்கொள்ளும் மன இயல்பு அதிகரித்துக் காணப்படுதல்.

★ மாணவர்களைப் பெற்றோர் வேலைக்கு அனுப்புதல்.

★ பாடசாலைகளில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளும் ஆடம்பரச் செயற்பாடுகளும் மாணவர் கல்விககு இடையூறாக அமைதல்.

போன்ற பல்வேறு கல்விசார் பிரச்சினைகள் இனங்காணப்பட்டதுடன் இவற்றினை இனங்காணுவதற்கு அவதானித்தல், பல்வேறு நிறுவனங்களின் அறிக்கைகள், பத்திரிகைகள, பேட்டிகள் எனப் பல்வேறு முறைமைகள் கையாளப்பட்டன. குடாநட்டு கல்விசார் பிரச்சினைகள் ஓரளவு நிரூபிக்கப்பட ஆவணமாக இவை உதவின எனலாம்.

இன முரண்பாட்டின் ஊடாகவும் அவை சார்ந்த பல்வேறுபட்ட இடர்பாடுகளாலும் கல்விசார் பௌதிக வளத்தில் பல்வேறு அடிப்படையில் அழிவு ஏற்பட்டதை யாரும் மறுக்க முடியாது. அநேகமான பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்ததுடன், அங்கு காணப்பட்ட தளபாடம் மற்றும் கற்றல், கற்பித்தல் சார் உபகரணங்களும் அழிவடைந்தன. இவை மூலம் யாழ். மாவட்ட கல்விசார் கட்டமைப்புக்குப் பல நூறுகோடி ரூபா நட்டம் ஏற்பட்டது. இவை யாழ். மாவட்ட கல்வி நிலையங்கள் பலவற்றைச் செயலிழக்க வைத்தது, மாணவரின் கற்றலில் உடல், உள ரீதியான ஊக்கத்தைக் குறைத்தது. பொருளாதார அடிப்படையிலும் சமூக மட்டத்திலும் ஏனைய பிரதேசத்துடன் ஒப்பிடும்பொழுது பின்னோக்கியே தள்ளப்பட நிர்ப்பந்திக்கப்படலாயிற்று. இது ஒரு வகையில் இலங்கை அரசின் இன முரண்பாட்டின் பின்னணியில் அமைந்த அடிப்படை நோக்கத்தை எய்தியதாகவே அரசியல் சார் கருத்தாகவும் இருக்கிறது.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் பாடசாலைகள் மூடப்படுவது அதிகரித்து வருகிறது. இப்பிரச்சினை பல்வேறு காரணங்களால் மிகவும் தீவிரமடைந்து வருகின்றது எனலாம். கொடிய யுத்தத்தின் விளைவால் தமிழர் தாயகப் பகுதியில் பரவலாகப் பல பாடசாலைகள் மூடுவிழா -கண்டுள்ளதையும், இலங்கையில் ஆயிரத்து 96 பாடசாலைகளும், அதில் அதிகம் வடக்கு - கிழக்குப் பிரதேசமும் உள்ளடக்கப்படுகின்றதையும் காணமுடிகின்றது.

யாழ். மாவட்டத்தில் வலய அடிப்படையிலும் பாடசாலையின் தர அடிப்படையிலும் செயற்படுகின்ற, தற்காலிகமாக இயங்குகின்ற, தற்காலிகமாக மூடுப்பட்ட பாடசாலைகள் என்ற அடிப்படையில் அட்டவணை 1 பல்வேறு தரவுகளைக் காட்டி நிற்கின்றது.

பாடசாலைகளின் மூடுவிழா பற்றி அண்மைய தரவுகளாக வடக்கு - கிழக்குப் பகுதியில் 2008 பாடசாலைகளில் 156 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்றும், இடம்பெயர்வு காரணமாக 144 பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்கிவருகின்றன எனவும் தெரிகிறது. அட்டவணை II சில வலயங்களினது பாடசாலைகளின் எண்ணிககையும் அவற்றில் மூடப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையும் காட்டுகின்றது.

மேற்படி தரவுகள் அடிப்படையில் நோக்கும்போது தமிழர் தாயகப் பகுதியில் பாடசாலைகள் மூடப்படுவதை அதிகளவில் காணமுடிகின்றது. இவற்றின் ஊடாக சமூகத்துககு எப்படியான விளைவுகள் ஏற்படுகின்றன, ஏற்படப்போகின்றன என்பது பற்றி ஆராய்கின்றபோது மாணவர்களின் கல்வி மற்றும் சமூக மேம்பாடு நோக்கிய செயற்பாடுகள் பின்னோக்கியே தள்ளப்படும் என்பதை

## அட்டவணை II

| வலயம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மூடப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| தீவகம் | 76 | 30 |
| வலிகாமம் | 152 | 21 |
| திருமலை | 80 | 15 |
| மன்னார் | 75 | 14 |
| யாழ். வலயம் | 119 | 11 |
| தென்மராட்சி | 68 | 10 |
| வவுனியா | 83 | 22 |
| மடு | 41 | 05 |
| துணுக்காய் | 54 | 05 |

யாரும் மறுக்கமுடியாது.

பொதுவான தேசியம் என்ற கொள்கையிலிருந்து நடைமுறைப்போக்கில் கொள்கைகளில் வேறுபட்ட ஒரு செயற்பாட்டு வடிவமாக கல்வியியல் சார் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையால் குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசமும், யாழ்ப்பாண மாவட்டமும் பாதிக்கப்படுதல் தவிர்க்க முடியாத விடயமாக மாறியது.

கல்விசார் மேம்பாட்டு செயற்திட்ட ஒதுக்கீடுகளிலும், நியமனங்களிலும் அரசியல் மற்றும் இனவேற்றுமைப் பாகுபாட்டுச் செல்வாக்கு மிகையாக இடம்பெறலாயிற்று. இதன் விளைவாக எமது பிரதேச மாணவர் மத்தியில் ஓர் உறுதியற்ற மனப்பான்மையும் அரசின் மீது வெறுப்பும் படிப்படியாக ஏற்படலாயிற்று.

நாட்டின் யுத்தசூழ்நிலை காரணமாக இராணுவப்பிரதேசத்தில் உள்ளடங்கிய பாடசாலைகள் உயர்பாதுகாப்பு என்ற போர்வையில் இன்னமும் இயங்கமுடியாத நிலையிலேயே உள்ளமையை நாம் இன்றும் யாழ். குடாநாட்டுப் பகுதியில் அவதானிக்கமுடிகின்றது. அட்டவணை III இதனை ஆதாரப்படுத்துவதாக அமைகின்றது.

சமகால சமாதானச் சூழ்நிலையில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற விடயம் அரசியல் ரீதியில் ஒரு பெரிய பிரச்சினையாக மாறி இருக்கின்றமை யாவரும் அறிந்தவிடயம். இதனால், மக்களின் அன்றாட வாழ்வியல் ஒழுங்குமுறைமை மற்றும் சமாதானம் நோக்கிய நம்பிக்கைத் தன்மை என்பன குறைவான மட்டத்தையே காட்டிநிற்கின்றன.

கடந்தகால போர்சார்ந்த நடவடிக்கைகளினால் பாடசாலை மாணவர்கள் உள, உடல் சார் வடுக்களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கின்றமையை நாம் அவதானிக்க முடிகின்றது. மிதிவெடி மற்றும் வெடிபொருள் சார் பாதிப்புக்களும், அங்க இழப்புக்களும் உளம்சார் பல்வேறு குறைபாடுகளும் எனப் பலவற்றை நாம சுட்டிக்காட்ட முடியும். கடந்தகாலப் போரினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தாய், தந்தையை இழந்த 965 மாணவர்கள் இருந்தனர் என்பதை அறிக்கைகள் காட்டிநிற்கின்றன. இதில் 55 மாணவர்கள் தாய், தந்தை இருவரையும், 706 மாணவர்கள் தந்தையை மாத்திரமும் 169 மாணவர்கள் தாயை மாத்திரமும் இழந்துள்ளனர். 35 மாணவர்கள் தந்தையைப் பிரிந்து வாழ்வதாகவும் செயலக அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக அமைகின்றன.

## அட்டவணை III

| உயர்பாதுகாப்பு வலயம் | பாதிக்கப்பட்ட பாடசாலை |
|---|---|
| நீலக்காடு | 04 |
| ஊருண்டி | 01 |
| மண்டைதீவு | 02 |
| ஞானம்ஸ் விடுதி | - |
| கிழக்கு அரியாலை | 14 |
| தனங்களப்பு | 02 |
| எழுதுமட்டுவாழ் | 11 |
| அம்பன் | 18 |
| பல்லம்பை | 01 |
| பருத்தித்துறை | 07 |
| தெல்லிப்பழை | 02 |
| அராலி | 18 |
| வேலணை | - |
| | 80 |

(வளரும்)

# கல்விச்சாலைக் காட்சிகள்



பருத்தித்துறை, தட்டாதெரு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் கே.முத்துக்குமாரு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)



மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவின்போது வித்தியாலய முன்னாள் அதிபர் வே.சண்முகநாதன் பாடசாலைக்கொடியினை ஏற்றிவைப்பதையும் அதிபர் வ.வைகுந்தவாசன் மற்றும் பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)



புங்குடுதீவு மகா வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் கா.குகபாலன் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அதிபர் க.தர்மகுணசிங்கம், சிறப்புவிருந்தினர் நா.சுந்தரராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (படம்: மண்டைதீவுச் செய்தியாளர்)



யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் கணனிக் கற்கை நிலையத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அதிபர் வீ.மாணிக்கம், ஆசிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ-10)

# காணவில்லை



உடுவில் டச் வீதியைச் சேர்ந்த

**கனகலிங்கம் (துரை) கபிலன் (வயது 13)**

என்பவரை இம்மாதம் மூன்றாம்திகதி சனிக்கிழமை முதல காணவில்லை. வீட்டில் இருந்து புறப்பட்டபோது கறுப்புநிற ரீசேட், நீலநிறக் காற்சட்டை, ஒருபவுண் சங்கிலி ஆகியன அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் உடன் பெற்றோருடன் தொடர்புகொள்ளவும் அல்லது அழைத்துவரவும். சன்மானம் வழங்கப்படும். தம்பி கபிலன், நீ எங்கிருந்தாலும் உடன் எம்மிடம் வந்து சேர்.

தகவல்:
தகப்பன் கனகலிங்கம் (துரை).

(30607)(34-13-17-21)

# நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்



*இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சராக இருந்து இந்துக்களுக்கும் ஏனையவர்களுக்கும் அரும்பணியாற்றிய*

உயர்திரு.

**தி.மகேஸ்வரன்**

அவர்கள் 27.03.2004 அன்று மாலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவம் அறிந்து மிகவும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். இவர் பூரணசுகம்பெற்று, மீண்டும் தம் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*முத்துமாரி அம்மன்கோவிலடி, திருநெல்வேலி.*

**அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை.**

(30592)(34-21-13-17)

## வீதி சேதமடைந்ததால் விபத்துக்கள் அதிகரிப்பு

தெல்லிப்பழை,ஏப்.8

சுன்னாகம் றொட்டியாலடிப்பகுதியில் காங்கேசன்துறை பிரதான வீதி கடும்சேதமடைந்து அதிகளவிலான குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இவ்வீதி வழியாக பயணிக்கும் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

றொட்டியாலடிக்கு அருகில் காங்கேசன்துறை பிரதானவீதியில் மேறகுபபுறம் அரைவாசிப் பகுதியில் அதிகளவு சிறுபள்ளங்கள் ஏற்பட்டுளளன. இதன்காரணமாக, இப்பள்ளங்களை விலத்தி, பயணிக்க முற்படும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் இப்பகுதியில் அடிககடி விபத்திற்குள்ளாகின்றன. இவ்வாறான பல விபத்துகள் சமீபகாலத்தில் இவ்விடத்தில் ஏற்பட்டுள்ளன. இதில் மூன்று பாரதூரமான விபத்துகளும் அடங்கும்.

இச்சம்பவங்களின் போது நால்வர் கடும்காயங்களுக்குள்ளானதோடு, ஒரு மோட்டார் சைக்கிளும் இரு சைககிள்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

காங்கேசன்துறை பிரதானவீதியின் ஒரு அபாயப்பொறியாக விளங்கும் இவ்வீதிப் பகுதியை புனரமைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பொதுமக்களின் வேண்டுகோளாகவுள்ளது.

(ம-150)

# புதுமடம் இளைஞர் மன்றம்

## பொது அறிவுப் போட்டி - 2003 முடிவுகள்

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| முதலாம் இடம் | | |
| துஷ்யந்தி தங்கராஜா | யாழ்ப்பாணக் கல்லூரி | 83½ |
| இரண்டாம் இடம் | | |
| கீதபொன்கலன் றோயல் சர்வானந்தா | யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி (2003 A/L) | 83 |
| மூன்றாம் இடம் | | |
| சர்மிலா பரமேஸ்வரன் | யாழ்ப்பாணக்கல்லூரி (Yr.11A) | 82½ |
| ஆறுதல் பரிசு பெறுவோர் | | |
| 1.நேசரத்தினம் ரூபதர்சன் | யாழ்ப்பாணக் கல்லூரி | 81 |
| 2.ஹேமச்சந்திரா பரமேஸ்வரன் | யாழ்ப்பாணக் கல்லூரி | 77½ |
| 3.சிந்திகா செல்வரட்ணம் | யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை | 77½ |
| 4.நாகதவபாலசுப்பிரமணியம் மகிந்தகுமார் | யாழ்ப்பாணக்கல்லூரி | 77½ |
| 5.பற்றிக் அல்பேட் அல்வின் சுகிர்தன் | புனித ஹென்றியரசர் கல்லூரி | 77½ |
| 6.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் | புனித ஹென்றியரசர் கல்லூரி | 77½ |
| 7.ஜெயபிரபா ஜெகதீஸ்வரன் | யா.இந்து மகளிர் கல்லூரி | 76½ |
| 8.கோ.கோபாலரஞ்சினி | யா.இந்து மகளிர் கல்லூரி | 76 |
| 9.டெனற்சியா தேவதாஸ் | யா.திருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாலயம் | 76 |
| 10.மேர்க்குரி அருள்நேசராஜா | யா.உடுவில் மகளிர் கல்லூரி | 76 |
| 11.ஸ்ரனிஸ்லோஸ் உதயராஜ் | யா.சென்.ஜேம்ஸ் ம.வி. | 76 |
| 12.கிருசாந்தினி நித்தியானந்தம் | யா.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி | 75 |
| 13.யோகலிங்கம் மயூரன் | யா.மானிப்பாய் இந்துக் கல்லூரி | 75 |

✲ 65 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ✲ பரிசளிப்பும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 12.04.2004 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

- சமுதாயமும் நாமும் வளர்வோம்.

(30545)(21-13-17)

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் 23.04.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *"செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம"* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 23.04.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விக்கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | VAT 15 % |
|---|---|---|---|
| 1. கொடிகாமம் பஸ் நிலையப் பயணிகள் தங்குமிடம் அமைத்தல் - கட்டம் 1 | 18000.00 | 500.00 | 75.00 |
| 2. கைதடி சந்தைக்கடை திருத்த வேலை | 7000.00 | 500.00 | 75.00 |
| 3. வரணி மகா வித்தியாலய வடக்கு வீதி திருத்தவேலை | 3500.00 | 500.00 | 75.00 |
| 4. மந்துவில் கேருவளை வீதி திருத்தம் | 3500.00 | 500.00 | 75.00 |

மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்வி பத்திரப்பணத்தையும் படிவத்திற்குரிய Vat பணத்தினையும் செலுத்துவதன் பேரில் 20.04.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2. கல்லுடைத்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கைதடி, வேம்பிராய் ஆகிய இடங்களில் சபைக்குச் சொந்தமான காணிகளில் உள்ள கற்பாறைகளை இயந்திரங்கள் மூலம் இடித்து அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது. இதற்கான தங்களது கூறுவிலைகளை மணித்தியாலம் ஒன்றுக்கு எவ்வளவு என்பதைக் கோரி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேறு வகையில் செய்வதாயினும் அது பற்றிய விவரங்களை குறிப்பிட்டு விவரமாக அனுப்பிவைக்கவும்.

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமையலுவலகம், கொடிகாமம்.
06.04.2004

(C34257)(37-13-17-21)

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

## அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய

### 64 ஆவது ஆண்டு விழா

முதலாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: நிலைய முன்றிலில்
காலம்: *11.04.2004 ஞாயிற்றுக்கிழமை*
நேரம்: *காலை 6.00 மணி*

- ★ துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி (பெரியவர்கள்)
- ★ துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி (சிறியவர்கள்)
- ★ மரதன் ஓட்டம் (பெரியவர்கள்)
- ★ மரதன் ஓட்டம் (சிறியவர்கள்)
- ★ மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டி

இறுதிநிகழ்வுகள் கலைநிகழ்வுகளுடன் (13.04.2004) புதுவருட தினத்தன்று மாலை 6.00மணிக்கு நிலைய முன்றிலில் இடம்பெறும்.

நிகழ்வு சிறப்புற வாழ்த்துபவர்:
**சசி பல்பொருள் வாணிபம்**
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.

(30593)(34)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையில் கடமைபுரியும் **திரு.செ.இலிங்கேஸ்வரன்** அவர்களின் அன்புத்தந்தையார்

**நாகலிங்கம் செல்லத்துரை**

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய நலன்புரிச்சங்கத்தினர் ஆகிய நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(30579)
(37-21-13-17)

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச்சபை
வடபிராந்திய நலன்புரிச்சங்கம்
17, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் அந்தோனி அருளப்பு**

(செபஸ்ரியாம்பிள்ளை)

(கச்சாய் புனித இராயப்பர் ஆலய சங்கிலித்தாம்)

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லாரை புனித செபமாலை மாதா ஆலய பங்குமக்கள்.

(30594)

# 19ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 08 - 04 - 1926



மறைவு 08 - 04 - 1985

**அமரர் சின்னையா மார்க்கண்டு**

பத்தொன்பது ஆண்டுகள் பறந்து சென்றாலும் தங்கள் பசுமையான நினைவுகள் எமது மனதில் என்றும் நிலைத்திருக்கும்.
உங்கள் நினைவுடனேயே நாமிங்கு வாழ்கின்றோம்.

பிரதான வீதி,
சங்கானை.

(30559)
(30-13-11-21)

- அன்பு மனைவி, சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி குணரெத்தினம் மரகதம்



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரெத்தினம் மரகதம் அவர்கள் நேற்று (07.04.2004) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் குணரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா ஆகியோரின் மகளும காலஞ்சென்றவர்களான முத்தையா - பொன்னம்மா ஆகியோரின் மருமகளும், ஸ்ரீகுணபூசனி, குபேரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம் (நியூசரஸ்வதி விலாஸ் உரிமையாளர்), யோகாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், பர்மிளா, ஜயாமினா (யா/இந்து மகளிர் கல்லூரி), சதீஸ் (யாழ்/வைத்தீஸ்வராக்கல்லூரி), துஷாயினி (யா/வேம்படி உயர்தரப் பாடசாலை), சுயித்தா, சிவாசினி, சுனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற நாகாத்தப்பிள்ளை (அமிர்தம்), மகேந்திரம், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும். டாக்டர் ஆ.பேரின்பநாதன், த.வயித்திலிங்கம் (கண்ணன் லொட்ஜ உரிமையாளர்) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*384/1, பலாலி வீதி*
*திருநெல்வேலி, T.P.077-6159713*

தகவல்
S.சுந்தரலிங்கம் (மருமகன்)

(30604)(37-13-17-21)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசுவர்

கொழும்பு,ஏப்.8

பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் பெரும் வெற்றியீட்டிய தமிழத் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்துக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்புச் சார்பில் தெரிவான 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடித் தமது எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர்.

நேற்றுக் காலையும் மீண்டும் கூடிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடல்களை முடித்துக்கொண்டு இன்று கொழும்பில் இருந்து புறப்படும் அவர்கள் மாலையில் கிளிநொச்சிக்கு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டாமென்று முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகர்கள் விடுதலைப் புலிகளுக்குத் தகவல் அனுப்பியுள்ளனர் என்று அறியவந்தது.

கூட்டமைப்பு உடனடியாக ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிகிறது. (ம-3)

## போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்த பிக்கு ஒருவரும் தேர்தலில் வெற்றியீட்டினார்

கொழும்பு,ஏப்.8

தேசிய ஹெல உறுமயக் கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாகல் செய்த பின்னர் போட்டியிலிருந்து விலக்கிக் கொள்வதாக அறிவித்த பிக்கு ஒருவரும் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார்.

கம்[illegible]றா மாவட்டத்தில் போட்டியிடவிருந்து பின்னர் விலகிக்கொண்ட ஆ[illegible]ரக்கே பஞ்ஞானந்த தேரர் என்ற பிக்குவே வெற்றியீட்டியிவராவார். இவர் 7 ஆயிரத்து 389 விருப்பு வாக்குகளைப் பெறறு நாடாளுமன்ற உறுபபினராக மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ம-10)

# தோல்விக்கான பொறுப்பை ஏற்பதாக ரணில் தெரிவிப்பு!

கொழும்பு,ஏப்.8

ஐக்கிய தேசியக் கட்சி, நடைபெற்ற தேர்தலில் தோல்வி அடைநதமைக்கான முழுப் பொறுப்பையும் தாம ஏற்றுக்கொள்வதாகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் இடம்பெற்ற ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்காகப் பேச்சுகள் நடைபெறவுள்ளன. உறுப்பினர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் நான் தலைவணங்கத் தயாராகவுள்ளேன். - என்றார் ரணில்.

இதேவேளை -

இக்கூட்டத்தில் முன்னாள் அமைசசர் எம்.எச்.முஹமட் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். "ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படுவர்" என்ற அந்தத் தீர்மானத்தை முன்னாள் அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார வழிமொழிந்தார். அதனைத் தொ[illegible]ர்ந்து தீர்மானம் நிறைவேற்றபட்டது.(ஒ-9-ரி)



# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா உதவவேண்டும்!

## புதிய பிரதமர் ராஜபக்ஷ கோரிக்கை



கொழும்பு,ஏப்.8

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரியிருக்கின்றார்.

மகிந்த ராஜபக்சஷ பிரதமராகத் தெரிவானமைக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்ற இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடமே புதிய பிரதமர் இந்தக்கோரிக்கையை முன்வைத்தார்.

புதிய பிரதமருக்கு முதன்முதலில் வாழ்த்துத் தெரிவித்த வெளிநாட்டு இராஜதந்திரி இந்தியத் தூதுவர் நிரூபம் சென்தான். அவர் தனது வாழ்த்தைப் புதிய பிரதமரின் இல்லத்துக்கு நேரில் சென்று தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

புலிகளுடனான பேச்சை நாம் முனனெடுத்துச் செல்ல இருககிறோம். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி முயல்வார். அதற்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு நாங்கள் ஆதரவுகொடுத்து உறுதுணையாக இருப்போம்.

அனுசரணைப்பணியை நோர்வேத் தரப்பிடமிருந்து மாற்றவேண்டியதில்லை. நாங்கள் அப்படிச்செய்ய மாட்டோம்.

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு உள்நாட்டளவில் அனைத்துக் கட்சிகள் மற்றும் பல்வேறு சர்வதேச நாடுகளின் ஆதரவை நாங்கள் கோருவோம்.

அதேநேரம், இந்தியா போன்ற பிறநாடுகள் சமாதான நடவடிக்கையில பங்காற்றவேண்டும்; உதவவேணடும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

1994 ஆம் ஆண்டு சமாதான முயற்சிகளைத் தொடக்கிவைத்தவரே நமது ஜனாதிபதிதான்.

ஆகவே, அதனை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பினையும் அவர் செவ்வனே செய்வார்.

ஆகவே, யுத்தம்வரும் என்று கருதத் தேவையில்லை. ஒரு யுத்தம் வராமல் தவிர்க்கவே நாம் முயல்வோம். (க-9-ரி)

# திருச்சபை வரலாறு வெளியிட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.8

1951 முதல் 2004 வரை உள்ளடக்கியதாக 'திருச்சபை வரலாறு' பேராயர் அதி.வண.எஸ்.ஜெபநேசனால் தொகுக்கப்பட்டு வருகிறது.

இக்காலப் பகுதிகளில் திருச்சபை வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்காற்றியவர்களின் படங்கள், வரலாறுகள், குருமாரின் படங்கள், வரலாறுகள் என்பனவற்றைத் தொகுத்து அனுப்பிவைக்குமாறு பேராயர் அதி.வண.எஸ்.ஜெபநேசன் கேட்டுள்ளார்.

1951இற்கு முன்னதாக 'சாவகச்சேரி திருச்சபையின் வரலாறு' எனும் நூல் பேராயர் எஸ்.ஜெபநேசனின் தந்தையார் சுப்பிரமணியம் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.

1951 - 2004 இற்கு இடைப்பட்ட 'திருச்சபையின் வரலாறு' நூல் வடிவமைப்புக்கு உதவ விரும்புவோா தமது விவரங்களைப் பேராயர் எஸ்.ஜெபநேசன், பேராயர் இல்லம், வட்டுக்கோட்டை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார். (ம-185)

## திடீரென நின்ற 'பிக் - கப்' மீது மோதி மோ.சைக்கிளோட்டி காயம்

தென்மராட்சி,ஏப்.8

வீதியில் வந்த படையினரின் 'பிக் - கப்' வாகனம் திடீரென நிறுத்தப்பட்டபோது அவ்வழியே வேகமாக வந்த மோட்டர் சைக்கிள் 'பிக் - கப்' வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கனகன்புளியடிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய கொடிகாமம், வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த இராயப்பு அருள்நேசன் (வயது 29) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

வீதியிலிருந்த குழியொன்றுக்காகப் படையினர் வாகனம் திடீரென நிறுத்தப்பட்டபோதே விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,ஏப்.8

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண விழா இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் சிவஸ்ரீ த.வீரபத்திரசிவக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அலுவலர் செல்வி செ.பத்மராணி, சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-117)

### வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கான

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்க புதிய அரசு ஏற்பாடு செய்யவேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானம்

கொழும்பு,ஏப்.8

தமிழ் மக்களின் தீர்ப்பை மதித்து வடக்கு - கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அமைக்க ஏற்பாடு செய்யுமாறு புதிய அரசை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரவிருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடியசமயம் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு - கிழக்குத் தாயகப்பிரதேசத்தில் மக்கள் நிம்மதியாக வாழ இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடன் நிறுவவேண்டும் எனக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கேட்டிருந்தது.

இந்த விஞ்ஞாபனத்தை ஏற்று மக்கள் ஒட்டுமொத்தமான தீர்ப்பை வழங்கியுள்ளனர். இந்தத் தீர்ப்பை மதித்து இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடன் அமைக்குப புதிய அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரிந்து நிற்காமல், ஓரணியில் ஒரே கொள்கைகளுடன் ஒரே இலட்சியத்துடன் செயற்படுவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

# ஈழவேந்தன், ஜோசப் ஆகியோர் தேசியப்பட்டியல் எம்.பிக்கள்

## தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில்

கொழும்பு,ஏப்.8

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக வடக்கில் மா.க.ஈழவேந்தனும் கிழக்கில் ஜோசப் பரராஜசிங்கமும் நியமிககப்படவுள்ளனர்.

கூட்டமைப்புக்குக் கிடைத்த இரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிகளை வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும்வகையில் இருவருக்கு வழங்குவது எனக் கூட்டமைப்பு ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தமிழீழ விடுதலை அணிச் செயலாளருமான மா.க.ஈழவேந்தனையும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரான ஜோசப் பரராஜசிங்கத்தை[illegible]ம் தேசியப்பட்டியல்மூலம் நிய[illegible] என்று முடிவுசெய்யப்பட்டு[illegible]

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளின் தலைமையைச சந்தித்த பின்னர் தேசியப்பட்டியல் உறுப்பினர் விவரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். (ம-3)

# சூழல் பாதுகாப்புத் தினத்தையொட்டி சாவகச்சேரி நகரசபை போட்டி

தென்மராட்சி,ஏப்.8

எதிர்வரும் ஜூலை ஐந்தாம் திகதி நடைபெறவுள்ள உலக சுற்றாடல் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7இற்கு மேல் கல்வி கற்கும் மாணவர்களிடையே கவிதை, பேச்சு, கட்டுரை, சுவரொட்டி, நாடகம, தாளலயம் ஆகிய போட்டிகளைப் பிரதேச சபையினர் நடத்தவுள்ளனர்.

'சுற்றாடல் அபிவிருத்தியும் முகாமைத்துவமும் பாதுகாப்பும்' என்னும் கருவை உள்ளடக்கி தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தின் உதவியுடன் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

'சுத்தமான சூழலும் சுகமான வாழ்வும்' என்னும் தலைப்பிலான கவிதைப்போட்டியில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் மூவர் வீதம் பங்கு பற்றலாம்.

'சூழல் பாதுகாப்பும் நவீன தொழிலநுட்பமும்' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டி நடைபெறும். தென்மராட்சிப் பகுதியில் தற்போதைய சூழல் பிரச்சினையும் அதனைத் தீர்க்கும் வழிமுறைகளும் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியும் 'பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவற்றின் பாவனையால் ஏற்படும் நன்மைகளும தீமைகளும்' என்னும் தலைப்பிலான சுவரொட்டிப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பணப் பரிசில்களும் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-117)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் புதிய பிரிவு

## சட்டமா அதிபர் திணைக்களம் நிறுவியது

கொழும்பு,ஏப்.8

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேட பிரிவு ஒன்றை சட்டமா அதிபர் திணைக்களம் நிறுவியுள்ளது.

துஷ்பிரயோக சம்பவங்கள் பற்றிய வழக்குகளைச் செயல்திறன் வாய்ந்த முறையில் வழிநடத்துவதற்காக இந்தப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் சிறுவர் சம்பந்தமான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. இவை பற்றிய பொலீஸ் விசாரணைகளும் துரிதமாக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் ஆலோசனைக்கமைய ஸ்தாபிக்கப்பட்ட புதிய பிரிவு பொலீஸாருககு வழிகாட்டியாக அமையும் என்றும் அனுபவம்வாய்ந்த சட்டத்தரணிகள் இப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (ம-ரி)

மக்கள் வங்கி மக்கள் வங்கி மக்கள் வங்கி மக்கள் வங்கி

# புதுவருடக் கொடுக்கல் வாங்கல் வைபவ அழைப்பிதழ் - 2004

## “மகிழ்ச்சியும் சமாதானமும் மலர்ந்திட மக்கள் வங்கியினரின் இனிய புதுவருட வாழ்த்துக்கள்”

2004 சித்திரை மாதம் 14ஆம் திகதி மக்கள் வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளான ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், கன்னாதிட்டி, பருத்தித்துறை, நீடித்த கருமபீடங்களான மானிப்பாய், திருநெல்வேலி, உரும்பிராய் மற்றும் நடமாடும் சேவை நிலையங்களான இணுவில், கொடிகாமம் ஆகிய அனைத்துப்பிரிவுகளிலும் சிங்கள / தமிழ்ப் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் நிகழ்வு காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை நடைபெறும்.

- அன்றைய தினம் புதிய கணக்குகள் ஆரம்பிப்பவர்களுக்கும், வைப்புக்களைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் ரூபா 10.00 நாணயம் கைவிசேடமாக வழங்கப்படும்.
- மேலும் ஆறுமாத காலவரையான சேமிப்புச் சான்றிதழ் வைப்பில் ரூபா 15,000.00 இடுபவர்களுக்கு ஒரு புதிய குடை அன்பளிப்பாக வழங்கப்படுவதோடு ‘ஜெயஸ்ரீ’ சீட்டிழுப்பிலும் சேர்த்துக்கொள்ளப்படும்.
- அடுத்தடுத்து வரும் வங்கி விடுறை காரணமாக 10.04.2004 சனிக்கிழமை வாடிக்கையாளருக்காக வங்கி திறக்கப்பட்டு சாதாரண அலுவல்கள் காலை 8.30 மு.ப. இலிருந்து 3.30 பி.ப. வரை நடைபெறும். ஆனால், அன்றைய தினம் தீர்வையலுவல்கள் நடைபெறமாட்டாது.

இத்தகைய பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் மக்கள் வங்கியினர் வரவேற்கின்றனர்.

**மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி.**

**பிரதேச முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**யாழ்ப்பாணம்.**
(C-34228) (30-16-17)

மக்கள் வங்கி மக்கள் வங்கி மக்கள் வங்கி மக்கள் வங்கி

## மட்டற்ற மகிழ்ச்சியுடன் மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**10 பாடங்களிலும் A பெற்றுச் சித்தியடைந்து சாதனை**



### செல்வி சிந்துஜா மதுரநாயகம்

**(மாணவி, இந்துக்கல்லூரி கிளிநொச்சி)**

அவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை 2003 இல் 10 பாடங்களிலும் A தரத்தில் சித்தியெய்தியமைக்காக நாங்கள் அவரை மட்டற்ற மகிழ்ச்சியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவருக்குக் கல்வியறிவூட்டி நெறிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இவர் மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட எல்லாம்வல்ல இறைவனைப் பணிகின்றோம்.

**அம்மப்பா, அம்மம்மா, அன்ரி,**
**சித்தப்பா, மாமாமார்,**
**அத்தைமார், சகோதர**
**சகோதரிகள், மைத்துனிமார்.**

S.V.தங்கராஜா,
*“முருகன் இல்லம்”,*
*நெல்லண்டை தும்பளை,*
*பருத்தித்துறை.* (C/34275)(34)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

### ஆட்டிறைச்சிக் கடை

2004-05-01 தொடக்கம் 2004-12-31 வரையான காலப்பகுதிக்கு ஆட்டிறைச்சிக் கடையைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2004-04-19ஆம் திகதி மு.ப.11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே ந.ப. 12.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். கேள்விப்படிவங்களை மீளளிக்கக்கூடிய பிணைப்பணம், மீளளிக்கப்படாத படிவக் கட்டணம், அதற்கான பெறுமதி சேர் வரி என்பவற்றைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2004-04-16ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பகாரர் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட அதிகரித்த தொகைக்கே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தமது கேள்வித் தொகையில் 15 வீதத்தைப் பெறுமதி சேர் வரியாக உ.நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.

| | நிர்ணயித்த தொகை பெ.சே.வரி நீங்கலாக | மீளளிக்கக் கூடிய பிணைப்பணம் | படிவக்கட்டணம் (பெ.சே.வரி உட்பட) |
|---|---|---|---|
| 01. ஆட்டிறைசசிக்கடை | 43340.00 | 1500.00 | 345.00 |

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
31-03-2004 (C-34277)(30-16-17)

திருமதி க.திருச்செல்வநாயகம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம். பருத்தித்துறை.

## உங்கள் வங்கி அலுவல்களை சௌகரியமாக மேற்கொள்ளுவதற்கு நீண்ட விடுமுறை நாட்களை குறைத்துக் கொள்வோம்...

## ஏப்ரல் 9ம் திகதி திறந்திருக்கும்...

- கொழும்பு - 1, பிறிஸ்டல் வீதி. இல. 21 லுள்ள வெளிநாட்டுக் கிளை, ஏற்றுமதி, இறக்குமதி, நடைமுறைக்கணக்கு மற்றும் பிரயாணப் பிரிவும் (Travels Department) கடல்கடந்த வங்கிச்சேவைப் பிரிவு (off shore Banking Centre) மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை திறந்திருக்கும்.
- நாட்டிலுள்ள எமது பெரும்பாலான கிளைகள் பண வைப்பு, பண மீளப்பெறுகை, காசோலை வைப்பு, வெளிநாட்டு நாணயக் கொள்வனவு மற்றும் விற்பனை ஆகியவற்றிற்காக மு.ப.10.00 முதல் பி.ப.2.30 வரை திறந்திருக்கும்.
- கார்கில்ஸ் ஃபுட் சிற்றிகளிலுள்ள மினிகொம் நிலையங்களும், ஆர்பிக்கோ சுப்பர் சென்டர்களிலுள்ள எமது சேவை நிலையங்களும், இந்த நீண்ட விடுமுறையின்போது ஏப்பிரல் 13ஆம் திகதி தவிர்ந்த ஏனைய சகல தினங்களிலும் மு.ப. 10.00 முதல் பி.ப. 7.30 வரை திறந்திருக்கும்.
- கொழும்பு 7இல் அமைந்துள்ள விடுமுறைநாள் வங்கி சேவை நிலையம் நீண்ட விடுமுறை தினங்கள் முழுவதும் மு.ப.10.00 முதல் பி.ப.2.30 வரை திறந்திருக்கும்.
- சனிக்கிழமை வங்கிச் சேவையை வழங்கும் கிளைகள் ஏப்பிரல் 10ஆம் திகதி வழமைபோல திறந்திருக்கும்.

கொமர்ஷல் வங்கி

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1920 05 10 — மறைவு 2003 03 22

### திருமதி கந்தையா பொன்னு

திதி : சதுர்த்தி (08.04.2004)

மண்ணுலகில் எமை ஈன்று வழிநடத்திய எம் தாயே!
விண்ணுலகை நீ நோக்கி நீண்ட தூரம் சென்றாயே!
நாம் உயர வழிவகுத்த தாயே! அம்மா!
ஆண்டுகள் எத்தனை போனாலும் அழியாது மறைந்த
தெய்வங்களான அகிலன், கந்தையா, அம்பலம் ஆகியோரின்
நினைவுகளுடன் உன் நினைவும் கூட.

ஆத்மசாந்திக்காக எலாம்வல்ல பரம் பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

விளானை, காரைநகர்.
சுழிபுரம் மேற்கு.
(நியூஸிலாந்து, மலேசியா, லண்டன்)
T.P.0777-738284 (30617)(38-12-14)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 07 1984 — மறைவு 22 03 2003

### அமரர் கந்தசாமி சுஜிந்தன்

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
ஆதரவுகாட்டி வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
ஓராண்டு கழிந்தாலும் உங்கள் நினைவு மட்டும்
எங்கள் நெஞ்சங்களைவிட்டு அகலவே அகலாது!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் அனைத்தும் இன்று (08.04.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு மதிய போசனத்திலும் பங்கேற்று ஆத்மசாந்திக்காகவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (30618)(38-12-14) - குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இந்த மாதத்திற்குரிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-6)


## தவறிவிட்டது

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று (07.04.2004) புதன்கிழமையன்று M.D.9000 வீடியோ கமெராவுக்குரிய CHARGER, BATTERY இரண்டும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சுஜா போட்டோ அன் வீடியோ
36, பாரதி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (30619(12)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (30331)(38)

சாங்கானை



இன்று முதல்
விஜய், ரிச்சா பட்டேல்,
விவேக், கிருஸ்ணா
மற்றும் பலர் நடித்த
ஷாஜகான்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 மு.ப
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
CHIKEN - RUN
(C/34770) (12)

ராஜா யாழ்ப்பாணம்



இன்று முதல்
லிட்டில் சுப்பர் ஸ்டார்
நடித்த
(சீலஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
(C/33519) (12)

சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடிக்க
A.R. [illegible] இசையில்....



தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00,
(C-34180) (12)


## துயர் பகிர்கின்றோம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைவங்கி, காங்கேசன்துறை கிளை முகாமையாளர் கந்தையா சிவபாலன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கந்தையா சந்திரவதனி

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு நாம் கவலையும் வேதனையும் அடைகின்றோம். இவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி ,
காங்கேசன்துறை கிளை, மல்லாகம். (30624)(12-14)

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,


வலிகாமத்து மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி முன்னணியில் திகழ்கின்ற

இணுவில் கணனியியல் கல்லூரி,

யாழ்.நகரில் தனது கிளையை விஸ்தரித்ததை முன்னிட்டு நடாத்துகின்ற....

கணனிக் கருத்தரங்கு

April 2004 09 முதல் 10,11,12 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் 230 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில்....... (இலுப்பையடிச்சந்தி அருகில்)

Introduction to Computer
Advantages of Computer
Classification of Computers
Hardware, Software,
Liveware & Firmware
Internet & E-Mail
Latest IT in World

இவற்றுடன் யாழ்ப்பாணத்தில் கணனிக்கற்கை நெறியை எவ்வாறு தெரிவுசெய்வது போன்றன அடங்கிய இலகு கற்கைக் குறிப்புக்களும் வழங்கப்படும்.

அனுமதி இலவசம்

விவரங்கள் & பதிவுகளுக்கு

இயக்குநர்,
கணனியியல் கல்லூரி
230 நாவலர் வீதி யாழ்


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்வநாயகம் மங்களேஸ்வரராணி

யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை ஆசிரியையும், சமாதான நீதவானும்

தோற்றம் : 05.08.1961
மறைவு : 09.03.2004

திதி:08.04.2004

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாக இருந்த குடும்பத் தலைவியை இன்று நினைவு கூருகின்றோம். அவர்களது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு, (30629)(12-14)

ஆ.செல்வநாயகமும் (கணவர்),
உறவினரும்.

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் விசுவலிங்கம் சிறீதரன்

தோற்றம் : 18.12.1961
மறைவு : 07.03.2004

07.03.2004 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சிறீதரன் பத்மலோஜினி (மனைவி),
விதுர்ஷன் (மகன்).

29/2, கடைச்சுவாமி லேன்,
நீராவியடி, யாழ்ப்பாணம். (30622)(12-14)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விநாயகமூர்த்தி அருந்தவநாயகி



பருத்தித்துறை பத்திரகாளி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி அருந்தவநாயகி அவர்கள் நேற்றுமுன்தினம் (06.04.2004) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் கமலநாயகியின் அன்புத் தாயாரும், கனகசிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மாமியாரும் உமாசங்கர் - லதா, கருணைராசன் - உமாதர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும் வரஜித், மகரதன் ஆகியோரின் பூட்டியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக்கிழமை மாலை 4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க.கமலநாயகி (மகள்).

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை. (30612)(12-14)

### திருமதி கந்தையா சந்திரவதனி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சந்திரவதனி அவர்கள் நேற்று (07.04.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கொக்குவில் நொத்தாரிசு சோமசுந்தரம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற செ.கந்தையா (உதவிக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு) அவர்களின் அன்பு மனைவியும் சோ. இராஜேந்திரம் அவர்களின் சகோதரியும் சந்திரராணி (ஜேர்மனி), சிவபாலன் (முகாமையாளர் - இலங்கைவங்கி, காங்கேசன்துறை), காலஞ்சென்ற சிவதாசன், சிவநாயகி (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயராசா, ஐதீஸ்வரி, குணானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக்கிழமை மாலை 4மணியளவில் "பிருந்தாபதி", ஏழாலை மேற்கு, ஏழாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை, உசத்தியோடை மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.சிவபாலன் (மகன்)
முகாமையாளர்,
இலங்கைவங்கி,
காங்கேசன்துறை.

"பிருந்தாபதி",
ஏழாலைமேற்கு,
ஏழாலை. (30623)(12-14)

### சண்முகம் சாமிநாதன்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானை மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சாமிநாதன் அவர்கள் 06.04.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சின்னம்மா அவர்களின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் திருநாவுக்கரசு - சின்னம்மாவின் அன்பு மருமகனும் பராசக்தி, பரமரெத்தினம், நாகரெத்தினம், தனபாக்கியம், பவானி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கோபாலசாமி, சுப்பிரமணியம், கனகசபாபதி, சோமசுந்தரம், ஆகியோரின் சகோதரரும் செல்லம்மா, தங்கேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் குலசேகரம், ரவிகுலன், வசந்தமலர், தங்கா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
மகன்.

மாளிகாவத்தை,
சங்கானை. (30616)(12-14)

# அரசமைப்பை சீர்திருத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அதிக ஆற்றல் வாய்ந்த புதியதோர் அரசை அமைப்பதற்கான மக்களின் அபிலாசைகளுக்கு இடமளிப்பதற்காகவே நான் தேர்தலொன்றை நடத்தவேண்டி நேரிட்டது என்பதைத் திரும்பத்திரும்பக் கூறவேண்டியதில்லை. நான் மேற்கொண்ட அந்தத் தீர்மானம் நியாயமானதென்பது, இந்தத் தேர்தல் பெறுபேறுகளிலிருந்து துலாம்பரமாகின்றது.

160 தேர்தல் தொகுதிகளில் 106 தேர்தல் தொகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெருவெற்றிபெற்றது. அதன்படி, எமது நாட்டில் 1978ஆம் ஆண்டுக்கு முன்னர் காணபட்ட தொகுதிவாரித் தேர்தல் முறைக்கமைய ஏறத்தாழ மூன்றில் இரண்டு அளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்கீழ்த் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்த மேலதிக வாக்குகளின் எணணிக்கை 7 லட்சத்துக்கும் அதிகமானதாகும். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் பொதுத் தேர்தலொன்றில் எய்தபட்ட அதிகூடிய வாக்குகள் இதுவாகும்.

தொகுதி வாரியாக - அதிக வாக்குப் பெற்றவர் - தெரிவுசெய்யப்படும முறை உலகின் பல நாடுகளில் உள்ளது. 1978இல் நாட்டின் மீது புதிய அரசமைப்புத் திணிக்கப்பட முன்னர் அந்த முறையே நமது நாட்டிலும் இருந்தது.

அத்தகைய முறையின் கீழ் தேர்தல் நடைபெற்றிருக்குமானால் - இவ்வளவு பெருந்தொகையான - அதிகபடியான - வாக்குகளைப் பெற்ற தரப்புக்கு - நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாத நிலைமை உருவாகியிருக்க மாட்டாது.

இம்முறை இடம்பெற்ற தேர்தலின் மூலம், ஐக்கிய மக்கள் சுதந்திர முனணி எய்திய வெற்றியின் பேரில் மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் புதிய அரசின் பிரதம அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். எதிர்வரும் ஒரு சில நாள்களுக்குள் புதிய அரசின் அமைச்சரவையும் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அரசால் நிறைவேற்றப்படவேண்டிய உடனடியானதும், முன்னணி வகிப்பதுமான பணிகள் ஏராளம் உள்ளன.

முதலில் மக்களுக்கு வாக்குறுதி அளித்தவாறே, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்க வேண்டிய பணிகளைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதன் போது, தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதன் நன்மைகள் மக்களைச் சென்றடைவதற்கான வழிவகைகளைக் காண்பது எமது முக்கிய நோக்கமாகும். சீரற்ற பொருளாதார முகாமைத்துவம் ஒன்றுக்குப் பதிலாக வினைத்திறன் மிகக் பொருளாதார முகாமையொன்றின் ஊடாகப் பொது மக்களின் சமூகவிருத்தி நிலையை வெற்றிகொள்ளும் தேசியப் பொருளாதார அபிவிருத்தியொன்றை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இவற்றின் மூலம் உடனடியாக நிறைவேற்றுவதற்கு உத்தேசித்துள்ள கருத்திட்டங்கள் பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, ஊழல் இன்றிய, வினைத்திறன் வாய்ந்த நல்லாட்சி முறையொன்றைக் கட்டியெழுப்புவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப்பொறுப்புகளிலும் உடனடியாக அரசு கவனம் செலுத்தவேண்டும்.

மூன்றாவதாக, இனப்பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீவைக் காண்பதற்கான உடனடி நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை நாம் மேற்கொள்வோம்.

நான்காவதாக, தற்போது சீரழிந்துள்ள சட்டத்தையும், ஒழுங்கையும் மீள நிலைநிறுத்தி, சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்புடன் சட்டத்துக்கு மதிப்பளிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்வதற்குப் புதிய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

அதேபோன்று, எமது நாட்டின் அரசியலுக்குக் கேடாக அமைந்துள்ள தற்போதைய தேர்தல் முறையை மாற்றியமைத்து, நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதுடன், ஜனநாயகத்துக்கும் மதிப்பளிக்கும் - விழுமியங்களை மதிக்கும் - சமூக மொற்றை உருவாக்குவதற்கு அவசியமான அரசமைப்புச்சார்ந்த சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் பொருட்டு அரசமைப்புச் சபையொன்றை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். நாம் உங்களிடம் கோரிய மக்கள் ஆணை, தெளிவாகவே புதிய அரசுக்குக் கிடைத்துள்ளது.

இன்று நாட்டில் வளர்ச்சி கண்டு வரும் சமூக, அரசியல் நிலைமைகளினூடாக மிகவும் சிக்கலார்ந்த, பின்னடைவுக்குரிய ஒரு சூழல் உருவாவதற்கு வாய்ப்புள்ளது என்பதை நான உங்களுக்கு வலியுறுத்திக் கூற வேண்டும்.

ஆகையால், நான் தொடர்ச்சியாக, அடிக்கடி தெரிவித்து வந்தவாறே இன்று மீண்டும் ஒருமுறை குறுகிய மனப்பான்மையைவிட்டு விலகி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகப் புதிய அரசு முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடுகளுடன் கைகோர்த்துச் செயற்படுமாறு நான் மிகவும் அழுத்தம் திருத்தமாகச சகல அரசியல் கட்சிகளிடமும், தொடர்புபட்ட சாராரிடமும் வேண்டுகின்றேன்.

இதற்காக சகல மட்டங்களிலும், சகலரினதும் பரந்த பங்களிப்புடன் மிகவும் வினைத்திறன் வாய்ந்த, மக்கள் நல ஆட்சியொன்றை முன்னெடுத்துச் செல்வது புதிய அரசின் நோக்கமாகும். 'நாட்டுக்கு முதலிடம்' வழங்கும எமது பயணத்துக்கு கட்சி பேதங்கள கிடையாது, சாதி பேதங்கள் கிடையாது. எமது நாட்டையும் எமது வருங காலத்தையும் முன்னோக்கி நாட்டுக்கு முதலிடம் வழங்கி வீறுநடைபோடும் எமது பயணத்துக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குமாறு சலக இலங்கை வாழ் மக்களிடமும் புதிய அரசு சார்பாக நான் மிகவும் விநயமாக வேண்டுகின்றேன்.

அதேபோல, இன்னும் சில நாள்களில் மலரவுள்ள சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் நான் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதோடு, மலரும் இவ்வாண்டு சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த ஓர் ஆண்டாக மிளிரவேண்டுமெனப் பிரார்த்திக்கன்றேன் - என்று தெரிவிக்கபபட்டுள்ளது. (எ-க)

## முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமர்தான முன்னெடுப்புக்களை இந்த அரசு எவ்வாறு முன்கொண்டு செல்லப்போகிறது என்பது குறித்த தெளிவான சமிஞ்ஞைகள் இது வரை இல்லை. அதேநேரம் அரசமைப்புச் திருததம் தொடர்பாக ஜனாதிபதி ஏற்கனவே எடுத்துள்ள முடிவுகள் குறித்தும் சரியான விவரங்களை எம்மால் பெற முடியவில்லை.

வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள் தமது தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றை வலியுறுத்தி தமிழரசுக் கட்சிக்கு ஆணை வழங்கியுள்ளனர். இதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் முஸ்லிம் மக்கள் தமது சுயாட்சிக்கோரிக்கையை வலியுறுத்தி ஆணைவழங்கியுள்ளனர்.

இந்த விடயங்களைத் தொடர்புபடுத்தி சமாதானப் பேச்சுக்களை முனனெடுப்பதில் புதிய பிரதமருக்கு உள்ள அக்கறை குறித்து நாங்கள் தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். எமது கட்சியின் அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்க முன்னர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் பேசுவது அவசியமாக உள்ளது. அவர்களை வழிநடத்துகின்ற புலிகளோடும் பேசவேண்டும். கடந்த காலத்தில் ஸ்ரீ.மு.கவுக்கும் புலிகளுக்கும் இடையில் உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. அவற்றிலே துரதிஷ்டவசமாக சில கருத்து வேறுபாடுகளும் தோன்றியிருந்தன.

ஆனபோதிலும் எமக்கு இடையிலே மீண்டும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்துச் சிந்தித்துப்பார்க்க வேண்டியுள்ளது.

தமிழ் - முஸ்லிம்களிடையே திறந்த மனதுடனான கருத்துப்பரிமாறல்கள் இடம்பெறுவது அவசியமானதாகும்.
- இப்படி ஹக்கீம் கூறினார். (எ-9-ரி)

## சமுர்த்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை -
சமுத்தி விவகார அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் என்றும், பிரதி சமுத்தி விவகார அமைசசராக டிலான் பெரேரா நியமிக்கப்படுவார் என்றும் சிங்களப்பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

வெளிநாட்டு முதலீடுகள், உல்லாசப் பயணத்துறை மற்றும் தொழில் அமைச்சர் பதவி அனுர பண்டாரநாயக்காவுக்கும், நிதி அமைச்சுப் பொறுப்பு மங்கள சமரவீரவுக்கும் வழங்கப்படலாம். மக்கள் தொடர்பு சாதன ஊடக அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம நியமிக்கப்படுவார் என்றும் போக்குவரத்து மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக தினேஷ் குணவர்த்தன நியமிககப்படுவார் எனவும் 'லங்கா தீப' பதிரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

## சந்திரிகா - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய பிரதமரின் சத்தியப்பிரமாண வைபவத்தில் தமக்கு அழைப்புவிடுக்கப்பட்ட போதிலும் ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள இருந்ததால் நிகழ்வுக்கு வருகைதர முடியவில்லையென ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. எனினும், இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிவிக்கப்படவில்லை.
(எ-9-8)

சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L 2006
புதிய பிரிவு ஆரம்பம்
விஞ்ஞானப்பிரிவு
வழமையான ஆசிரியர்
ஆரம்பம்: 11.04.2004

SUBRA 14
GOV.-REG.
சித்தன்கேணி
2006 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பித்துவிட்டன.
★ அனுமதிக்கு முந்துங்கள்
★ வலி. மேற்கில் தகுதி உள்ள தனித்துவமான ஆசிரியர் குழுவின் சேவை SUBRAவில் மட்டுமே!
(C/34094)(40)

CHEMISTRY CENTRE
Temple Rd., நல்லூர்.
A/L 2005
INORGANIC
Tue., Fri. 3 - 4 p.m.
A/L 2006
GENERAL
Mon.,Fri. 5.30 - 6.30 p.m.
(C/34257)(38)



உ
விநாயகர் துணை
தூவடி அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகர் ஆலய
கைலாச வாகன வெள்ளோட்டமும்
6 ஆம் திருவிழாவும்
இன்று (08.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு திருநெல்வேலி விநாயகர் சிற்பாலயக் கலைக்கூடத்தில் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினமும் உதவியாளர்களும் இணைந்து புதிதாக நிர்மாணித்த
கைலாசவாகன வெள்ளோட்ட விழா
ஆரம்ப நிகழ்வும் கலைஞர் கௌரவிப்பும், விசேட மங்கள இசையுடன் நடைபெறும். நாளை (09.04.2004) வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் உலாவருவார்.
மாலை 5 மணிக்கு பூசையாகி 6 மணிக்கு த மண்டபப் பூசை நடைபெற்று புதிய கைலாச வாகனத்தில் எம்பெருமான் எழுந்தருளுவார்.
அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!
தாவடி. (C/34293)(38) - 6ஆம் விழா உபயகாரர்கள்.

# மட்டு. - அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திக்கப்பட்டபோது அந்தச்சாக்கில் அவர்களும் உள்ளே நுழைந்து கொண்டனர்.

இதனிடையே நேற்றும், நேற்று முன்தினமும் கொழும்பில் தங்கி நின்ற மட்டு. - அம்பாறை தமிழ் எம்.பிக்கள் அனைவரும் தொடர்ந்தும் கொழும்பில் தங்கியிருக்கவிரும்பினர்.

ஆனால், சம்பந்தப்பட்ட கருணாவின் ஆள்கள் கிழக்குக்குத் தொடர்பு கொண்டு இது குறித்துத் தகவல் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து சம்பந்தப்பட்ட எம்பிக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கூட்டிவந்த இராணுவத்தினர் தாங்கள் உடனடியாக கிழக்கே திரும்ப வேணடும் என்றும் -

எம்.பிக்களைப் பத்திரமாகக் கூட்டிச் செல்லவேண்டிய பொறுப்பு தங்களுடையது என்பதால் அந்த எம்பிக்கள் தங்களுடன் வரவேண்டும் என்றும் அடம்பிடித்தனர்; பலவந்தப்படுத்தினர்.

தமிழ்க் கூட்டமைப்பு சிரேஷ்ட எம்.பியான இரா. சம்பந்தன் உடனடியாக இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையைச் சமாளிக்க முயன்றார். எனினும், அவரது முயற்சி பலிக்கவில்லை.

இராணுவத்தினர் அந்த ஐந்து எம்பிக்களையும் வற்புறுத்தித் தம்முடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் ஐவரும் பதற்றத்துடன் கிழக்கே சென்றதும் தாங்கள் எதிர்கொள்ளக் கூடிய நெருக்குதல் குறித்து அச்சத்துடன் புறப்பட்டுச் சென்றனர்.

புறப்பட்ட சமயம் அவர்களில் ஒருவரின் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்ததாகவும் அதனை அவதானித்த ஒருவர் தெரிவித்தார். தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களுடன் ஒன்றிணைந்து செயறபட இணங்கியதற்காக இவர்கள் ஐவரும் கருணாவின் ஆள்களின் கடும் நெருக்குதலுக்கு ஆளாவார்கள் எனக் கருதப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 20 எம்.பிக்களும் நாளை வெள்ளிக் கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப்பேசவுள்ளமை தொடர்பாக முன்னர் வெளிவந்த செய்தி 9ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (எ-க)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்காக முழு மனதுடன செயற்படுவோம். தமிழ் மக்கள் தந்த தெளிவான ஆணைக்கு அமைய இது விடயத்தில் நாடாளுமன்றத்திற்கு உளளேயும், வெளியேயும் - விசேடமாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் - செயற்படுவோம்.

★ தமிழ் பேசும் மக்கள் வரலாறு ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்ற கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நாம் கோரி நிற்கின்ற - அரசியல் வேட்கையை அடைவதற்கு எவ்விதமான சந்தேகங்களுக்கும் அப்பால் - எவ்விதமான மாறுக்கருத்துக்களுக்கும் இடமின்றி உழைப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

★ நடந்து முடிந்த தேர்தலில் எவ்வித கேள்விக்கும் இடமில்லாமல் எமது மக்கள் தமது தீர்க்கமான முடிவாக இதனையே வெளிப்படுத்தியுள்ளமையை உணர்ந்து அந்த அரசியல் அபிலாஷையை அடைவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட உறுதி பூண்டுள்ளோம் - என்று உள்ளது. (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமசாமி கனகம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமசாமி கனகம்மா நேற்று (07.04.2004) புதன்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர் - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும் அமரர் இராமசாமி ஆச்சாரியாரின் பாசமிகு மனைவியும் திலகவதி (ராசா), தவமணி (திரவியம்), விக்னேஸ்வரி (விஜயா), பாலமுரளி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ.பாலமுரளி (மகன்- கனடா),
ச.செல்வராசா (மருமகன்),
சி.கந்தசாமி (ராசா-மருமகன்),
கு.விஜயரட்ணம் (மருமகன்)

*அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.* (C/34304)(12-14)

## பொன்னையா சிவசுப்பிரமணியம்

(நடேசலிங்கம், ஸ்ரீவரதாஸ் புடைவை மாளிகை முன்னாள் உரிமையாளர்)



இணுவில் கிழக்கு, இளந்தாரி கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா சிவசுப்பிரமணியம் (நடேசலிங்கம்,ஸ்ரீவரதாஸ் புடைவை மாளிகை-யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (07.04.2004) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக கிழமை பிப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*இளந்தாரி கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
T.No. 077 6034349*
(30630)(38-12-14)

## திருமதி பரமசாமி கனகம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கம்மாவின் அன்பு மகளாகிய பரமசாமி கனகம்மா நேற்று (07.04.2004) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமியின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், முத்துப்பிள்ளை, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோடீஸ்வரி, காலஞ்சென்ற கோபாலசிங்கம், சண்முகலிங்கம், தில்லைநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற சரோஜினிதேவி, காலஞ்சென்ற நடேசபிள்ளை, நவரட்ணராஜா, சதானந்தன் (சுவிஸ்), அருச்சுனராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற கிருஷ்ணராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மயில்வாகனம், சத்தியபாமா, இராசம்மா, இராசமணி, பொன்னம்பலம், ஜெயந்திமாலா, இந்திராணி, ரதிவதனி, கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிகிலா, கவிதா, சுபிதா, பிரபாகரன் (சுவிஸ்), சுபாஜினி (லண்டன்), கிருஷாந்தி, சத்தியபாலன் (லண்டன்), குகபாலன் (லண்டன்), தெய்வஜானகி (லண்டன்), பங்கஜவாணி (லண்டன்), பாஸ்கரன், கிருபாகரன் (இத்தாலி), காலஞ்சென்ற நந்தினி, சிறிதரன், தேனுகா, நுவேதா, சதீஷ் (சுவிஸ்), சங்கேஷ் (சுவிஸ்), நதீஜா (சுவிஸ்), நவீன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பவிஸ்யா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மயில்வாகனம் கோடீஸ்வரி (மகள்),
பரமசாமி சண்முகலிங்கம் (மகன்),
பரமசாமி நவரட்ணராஜா (மகன்).

*நல்லூர் பிரதேச சபைக்கு
அருகில்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.*
(C/34305)(38-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

156 தொடர் இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள CG125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ.கிருஸ்ணகுமார், சிறுப்பிட்டி. T.P. 0776051360. (30569)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த 1977ஆம் ஆண்டு செவ்வாய் 8, சித்திரை 4ஆம் பாதம் B.Sc. பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் Dr., Eng. பட்டதாரி, தொழில்புரியும் மணமகனைப்பெற்றோர் தேடுகின்றனர். வீடு, சீதனம் வழங்கப்படும். ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு: விள. இல. 2220 மே/பா உதயன்.(30601)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடத்தும் வாராந்த ஆனமீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளைய நிகழ்வு மாலை 5.30 மணியளவில நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் உதவிப பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. வசாவிளான் மத்தி மகா வித்தியாலய ஆசிரியர் பரமேஸ்வரன் 'இந்து சமயத்தின் இலக்கியங்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-ரி)

## ஓட்டோ விற்பனைக்கு

*நல்ல நிலையிலுள்ள ஓட்டோ விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.*

**எ.விக்ரர்,**
68, குருசோ ரோட், யாழ்ப்பாணம். (30599)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (உத்திராடம்) 49 வயதுடைய ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவுடைய ஆஸ்திரேலியா ரெலிகொம் தொழில்நுட்பவியலாளராக (Australia Telecom Technologist) தொழில் புரிபவருக்கு 39 வயதுக்குட்பட்ட மணப்பெண் தேவை.

தொடர்பு
**விளம்பர இல.2219 மே/பா உதயன்**
(30598) (21-11-16)

## வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் நடத்திய
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயத்தில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் 05.04.2004 திங்கட்கிழமை நடத்தப்பெற்ற அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்களின் விவரம் வருமாறு.

முதலாம் பரிசு 1254
இரண்டாம் பரிசு 2438
மூன்றாம் பரிசு 3997

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:
0007, 1049, 1706, 3091, 1412, 0333, 2301

*வட்டுக்கோட்டை.* **இந்து வாலிபர் சங்கம்**
(C/34254) (37-21-11-16)

## நலம் பெறப் பிரார்த்திக்கின்றோம்



முன்னாள் இந்து கலாசார அமைச்சராக இருந்து மக்களுக்கு அரிய பெரிய தொண்டாற்றிய
**திரு.தியாகராசா மகேஸ்வரன்**
அவர்கள் பிரசாரக் கூட்டத்தில் ஈடுபட்ட போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார். அன்னார் உடல் நலமும் வெற்றியும் பெற்று மேன்மேலும் மக்களுக்கு அரிய பல சேவைகளாற்ற ஸ்ரீஞான துர்க்காபுரம் துர்க்கை அம்பாளை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்ரீதுர்க்காபுரம் துர்க்கை அம்பாள்*
*தர்மகர்த்தா குடும்பத்தினர்,*
*திரு. திருமதி நவரத்தினம் மனோன்மணி.*
(C/34255) (21-11-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவ/மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் தற்போதைய மாணவியும் திரு.திருமதி விவேகானந்தன் - ஜசோதரா தம்பதிகளின் புதல்வியுமான
**செல்வி வி.ஜீவிகா**

5 ஆம் தரப் புலமைப் பரிசில் தேர்வில் ஜனாதிபதியின் "மினி முத்து" பரிசிலையும் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் இரு தடவைகள் தங்கப் பதக்கத்தையும் சங்கீத, நடன, பண்ணிசை, ஆங்கில தினப்போட்டிகளில் மாகாண மட்டத்தில் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வென்றெடுத்தவர் இவர். தற்போது 2003 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10A சித்திகளைப் பெற்று பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் மேலும் பலசாதனைகள் படைக்கவேண்டும் என்று பாராட்டுவதோடு, மனம்நிறைய வாழ்த்துகின்றோம்.

*சாவகச்சேரி.* **- திலக நர்த்தனாலய மாணவிகள்.**
(30597)(34-21-11-16)

## வாருங்கள்! வாருங்கள்!! இலவசம்!!!

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
**மாபெரும் மலிவு விற்பனையும்**
விசேட கொடுப்பனவும்

* தரமான வர்ண வர்ண ஜவுளித் திவுசுகள்
* சேட்டிங் சூட்டிங் வகைகள்
* திருமண பட்டுப்புடைவைகள்
* சல்வார் கம்மீஸ் வகைகள்

(இவை யாவும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டவை)

* 3000/= ரூபாவுக்கு கொள்வனவு செய்வோருக்கு ஒரு T சேட் இலவசம்.
* 4000/= ரூபாவுக்கு கொள்வனவு செய்வோருக்கு ஓர் அழகிய சாறி இலவசம்.

**ஜே.ஆர்.எம். ரெக்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.
உரிமையாளர்: **ம.றாபேட்**
(30576)(34)



டாக்டர் அருட்கவி
**சீ.விநாசித்தம்பி M.A**

ஐயா அவர்களின் அருள் வழிகாட்டல சமூக, சமயப்பணிகள், தான் தோற்றிக் கவித்துவ ஆற்றல் என்பவற்றின் பெருமைகளுக்கு மதிப்பளித்து சர்வதேச பல்கலைக் கழகம் (28.03.2004) இல் ஐயா அவர்களுக்குக் கலாநிதிப்பட்டத்தை வழங்கிக்கௌரவித்துள்ளது. இதனை ஒட்டி அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம். அவர்களின் அருட்பணி தொடர இறையருள் துணை நிற்பதாக **கமலதனம்.**

*கோப்பாய்.* (30575)(37-11-16-21)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து
## HAPPY BIRTHDAY

செல்வன்
**சா.வருண்**

6240, FRANCE இல் வசிக்கும்
*சாந்தலிங்கம் - குமுதினி*
தம்பதியரின் செல்வப்புதல்வன் **வருண்**



தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (08-04-2004) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். செல்வன் வருணை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சபேஸ் (பெரியப்பா), குழந்தை (பெரியம்மா), சத்தி (சித்தப்பா), கொடிகாமத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சந்திரா மாமா (குடும்பம்), கொழும்பில் வசிக்கும் சத்தி பெரியம்மா (குடும்பம்), லண்டனில் வசிக்கும் குமார் மாமா, இந்திரா பெரியம்மா (குடும்பம்) அனைவரும் எல்லாம்வல்ல இறையருளால் வெள்ளைப் பிள்ளையார் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
**திரு.திருமதி சாந்தலிங்கம்**

சேச்லேன்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
(30600)(34-11-16)

## மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவிலே எமது அன்புக்குரியவரான
செல்வன்
**இராமச்சந்திரன் அஜந்தா**
அவர்கள் கலைமாணி சிறப்புப்பட்டம் பெற்றமையையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**-பெற்றோர்.**

*45/7,பூநாறி வேன்,*
*கொக்குவில் மேற்கு.*
*கொக்குவில்*
(30549)(21-11-16)

## திருமண அழைப்பு

உ

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (09.04.2004) வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 12.07மணிமுதல் 1.12மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

திரு.திருமதி முருகன் பரமேஸ்வரி
தம்பதிகளின் புத்திரன்
திருவளர் செல்வன்
**ஸ்ரீஸ்கந்தராசா**
அவர்களுக்கும்



திரு.திருமதி அருணாசலம் சரஸ்வதி
தம்பதிகளின் புத்திரி
திருவளர்செல்வி
**ஜெகதா**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி மு.பரமேஸ்வரி குடும்பத்தினர்,
பழைய கமம், முரசுமோட்டை.

திரு.திருமதி இராஜகுலேந்திரன்,
விடத்தற்பளை, மிருசுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)

☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(30588)(21-111-16)

## நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்
## வெற்றிக்கு வாழ்த்துகிறோம்



இளவயதில் அரசியலில் இணைந்து எந்த மைதானத்திலும் ஆடமுடியும் என்பதை நிரூபித்து மக்கள் பணியாற்றிவரும் நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. தியாகராசா மகேஸ்வரன்**
முழுமூச்சாக மக்கள் பணியாற்ற மீண்டும் பூரண சுகமடையவேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு அவரது வெற்றி குறித்து எமது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பரிபாலன சபையினர்
**ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்**
இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
(30596)(34-11-16-21)

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## அம்பாந்தோட்டை மாவட்டம்

| கட்சி | முல்கிரிகல | பெலியத்த | தங்கால | திஸ்ஸ | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 34604 | 32017 | 48744 | 57861 | 5669 |
| ஐக்கிய தேசிய முன்னணி | 22582 | 17631 | 22472 | 33449 | 2743 |
| ஐக்கிய சோசலிஷ கட்சி | 51 | 44 | 60 | 83 | 01 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | - | 68 | 68 | 121 | 01 |
| புதிய இடதுசாரி முன்னணி | 86 | 39 | 27 | 36 | 07 |
| இலங்கை தேசிய முன்னணி | 06 | 03 | 06 | 09 | 02 |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 02 | 02 | 06 | 01 | 01 |
| சுவராட்ய கட்சி | 08 | 05 | 07 | 11 | - |
| பூமிபுத்திர கட்சி | - | 29 | 14 | 31 | 16 |
| லலித் முன்னணி | 61 | 49 | 54 | 82 | 06 |
| சுயேச்சைக் குழு 1 | 03 | 20 | 08 | 09 | 01 |
| சுயேச்சைக் குழு 2 | 07 | 10 | 06 | 07 | 02 |
| சுயேச்சைக் குழு 3 | 03 | 05 | 03 | 11 | 01 |
| சுயேச்சைக் குழு 4 | 01 | 01 | - | 04 | - |
| சுயேச்சைக் குழு 5 | 19 | 09 | 08 | 26 | - |
| சுயேச்சைக் குழு 6 | - | 06 | 04 | 11 | - |
| சுயேச்சைக் குழு 7 | 12 | 03 | 04 | 07 | - |
| சுயேச்சைக் குழு 8 | - | 35 | 37 | 28 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 57568 | 49976 | 71528 | 91787 | 8451 |
| நிராகரிக்கப்பட்டவை | 4438 | 2717 | 4121 | 6311 | 137 |
| மொத்த வாக்குகள் | 62006 | 52693 | 75649 | 98098 | 8588 |

## பொலநறுவை மாவட்டம்

| கட்சி | மின்னேரியா | மெதிரிகிரிய | பொலநறுவை | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 30,342 | 26,114 | 45,936 | 3,851 |
| ஐ.தே.க | 17,522 | 20,522 | 35,420 | 2,200 |
| சோசலிச கட்சி | 152 | 182 | 290 | 03 |
| ஹெல உறுமய | 850 | 388 | 1,067 | 108 |
| ருகுணு கட்சி | 01 | 00 | 04 | 01 |
| தேசிய முன்னணி | 04 | 01 | 08 | 02 |
| பூமி புத்ர | 07 | 02 | 03 | 01 |
| இடது சாரி முன்னணி | 12 | 08 | 20 | 01 |
| ஜாதிக பெரமுன | 32 | 23 | 59 | 02 |
| சுயேச்சை 1 | 03 | 02 | 08 | 00 |
| சுயேச்சை 2 | 04 | 03 | 03 | 01 |
| சுயேச்சை 3 | 03 | 04 | 02 | 00 |
| சுயேச்சை 4 | 04 | 01 | 03 | 00 |
| சுயேச்சை 5 | 02 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 6 | 00 | 02 | 03 | 00 |
| சுயேச்சை 7 | 00 | 02 | 02 | 00 |
| சுயேச்சை 8 | 02 | 01 | 02 | 00 |
| சுயேச்சை 9 | 04 | 04 | 05 | 00 |
| சுயேச்சை 10 | 21 | 16 | 14 | 00 |

## நுவரெலியா மாவட்டம்

| கட்சி | நுவரெலிய மஸ்கெலிய | கொத்மலை | ஹங்குராங் கெத்த | வலப்பனை | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 25,989 | 15,964 | 16,962 | 20,607 | 3,423 |
| ஐ.தே.க | 100,350 | 25,390 | 25,313 | 22,768 | 3,150 |
| மலையக மக்கள் முன்னணி | 41,563 | 4,182 | 574 | 3,170 | 239 |
| இ.ஜ.ஐக்கிய.முன்னணி | 7,331 | 1.563 | 88 | 1,697 | 57 |
| சோசலிச கட்சி | 1,019 | 144 | 73 | 188 | 02 |
| ஹெல உறுமய | 2,617 | 593 | 630 | 395 | 219 |
| ருகுணு கட்சி | 72 | 01 | 03 | 03 | 00 |
| முற்போக்கு முன்னணி | 06 | 00 | 02 | 03 | 00 |
| ஸ்வராஜ்ஜிய | 12 | 01 | 06 | 04 | 00 |
| பூமி புத்ர | 23 | 08 | 09 | 11 | 02 |
| இடது சாரி முன்னணி | 113 | 11 | 16 | 42 | 05 |
| தேசிய முன்னணி | 11 | 03 | 04 | 07 | 01 |
| ஜாதிக பெரமுன | 372 | 27 | 77 | 51 | 05 |
| மிதவாதக்கட்சி | 58 | 25 | 04 | 99 | 02 |
| சுயேச்சை 1 | 19 | 05 | 09 | 11 | 01 |
| சுயேச்சை 2 | 27 | 03 | 01 | 06 | 01 |
| சுயேச்சை 3 | 36 | 09 | 11 | 16 | 00 |
| சுயேச்சை 4 | 54 | 13 | 15 | 13 | 00 |

## திகாமடுல மாவட்டம்

| கட்சி | கல்முனை | பொத்துவில் | அம்பாறை | சம்மாந்துறை | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 9,189 | 22,192 | 55,729 | 19,117 | 5.520 |
| ஐ.தே.க | 971 | 5,723 | 31,525 | 1,664 | 2.238 |
| இ.தமிழரசுக் கட்சி | 13,842 | 31,890 | 62 | 8.976 | 763 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 21,978 | 33,787 | 00 | 17,688 | 1.429 |
| முஸ்லிம் கூட்டமைப்பு | 84 | 71 | 66 | 109 | 05 |
| ஈ.பி.டி.பி | 252 | 923 | 232 | 178 | 26 |
| லலித் முன்னணி | 05 | 07 | 30 | 10 | 01 |
| சோசலிச கட்சி | 04 | 45 | 49 | 04 | 02 |
| ஹெல உறுமய | 02 | 81 | 945 | 01 | 101 |
| ருகுணு கட்சி | 01 | 01 | 02 | 01 | 00 |
| முற்போக்கு முன்னணி | 65 | 122 | 17 | 66 | 02 |
| முஸ்லிம் கட்சி | 00 | 00 | 00 | 00 | 00 |
| பூமி புத்ர | 16 | 41 | 07 | 21 | 00 |
| இடது சாரி முன்னணி | 04 | 08 | 28 | 03 | 00 |
| தேசிய மக்கள் கட்சி | 04 | 00 | 00 | 00 | 00 |
| ஜாதிக பெரமுன | 02 | 16 | 33 | 08 | 01 |
| சுயேச்சை 1 | 10 | 01 | 04 | 07 | 00 |
| சுயேச்சை 2 | 94 | 18 | 00 | 32 | 02 |
| சுயேச்சை 3 | 45 | 05 | 03 | 02 | 00 |
| சுயேச்சை 4 | 02 | 01 | 00 | 01 | 00 |
| சுயேச்சை 5 | 15 | 11 | 07 | 07 | 00 |
| சுயேச்சை 6 | 02 | 13 | 02 | 03 | 00 |
| சுயேச்சை 7 | 00 | 04 | 04 | 02 | 00 |
| சுயேச்சை 8 | 19 | 03 | 03 | 01 | 00 |
| சுயேச்சை 9 | 02 | 02 | 00 | 00 | 00 |
| சுயேச்சை 10 | 15 | 01 | 02 | 00 | 00 |
| சுயேச்சை 11 | 51 | 04 | 01 | 04 | 00 |
| சுயேச்சை 12 | 01 | 01 | 00 | 01 | 00 |
| சுயேச்சை 13 | 11 | 03 | 02 | 00 | 00 |
| சுயேச்சை 14 | 02 | 07 | 00 | 02 | 01 |
| சுயேச்சை 15 | 00 | 08 | 01 | 02 | 00 |
| சுயேச்சை 16 | 01 | 03 | 02 | 00 | 00 |
| சுயேச்சை 17 | 01 | 03 | 01 | 00 | 00 |
| சுயேச்சை 18 | 00 | 01 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 19 | 00 | 05 | 03 | 00 | 00 |
| சுயேச்சை 20 | 02 | 03 | 02 | 02 | 00 |
| சுயேச்சை 21 | 00 | 03 | 02 | 00 | 00 |
| சுயேச்சை 22 | 03 | 03 | 02 | 00 | 00 |
| சுயேச்சை 23 | 03 | 01 | 00 | 01 | 00 |
| சுயேச்சை 24 | 03 | 04 | 04 | 03 | 00 |
| சுயேச்சை 25 | 00 | 03 | 19 | 04 | 00 |
| சுயேச்சை 26 | 16 | 34 | 12 | 11 | 01 |
| சுயேச்சை 27 | 08 | 24 | 17 | 07 | 00 |

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## கொழும்பு மாவட்டம்

| கட்சி | கொழும்பு வடக்கு | கொழும்பு மத்தி | பொறளை | கொழும்பு கிழக்கு | கொழும்பு மேற்கு | தெஹிவளை | இரத்மலானை | மொறட்டுவை | கோட்டை | கடுவெல | கொலன்னாவை | அவிசாவளை | ஹோமாகம | மஹரகம | கெஸ்பாவ | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 12,724 | 11,681 | 12,484 | 12,141 | 3,613 | 12,577 | 19,284 | 38,833 | 20,070 | 53,065 | 32,976 | 37,380 | 49,520 | 37,919 | 45,939 | 8,482 |
| ஐ.தே.க | 40,387 | 71,599 | 21,543 | 23,739 | 19,084 | 19,865 | 18,448 | 34,313 | 19,635 | 32,772 | 29540 | 28,607 | 29,029 | 22,337 | 26,302 | 4,641 |
| முஸ்லிம் கூட்டமைப்பு | 75 | 317 | 61 | 40 | 22 | 24 | 23 | 33 | 30 | 30 | 81 | 40 | 29 | 22 | 29 | 02 |
| லலித் முன்னணி | 57 | 117 | 20 | 25 | 19 | 17 | 20 | 49 | 16 | 37 | 29 | 43 | 39 | 34 | 27 | 01 |
| சோசலிச கட்சி | 93 | 204 | 27 | 57 | 20 | 30 | 31 | 73 | 29 | 53 | 74 | 71 | 59 | 32 | 40 | 01 |
| ஈ.பி.டி.பி | 45 | 66 | 12 | 65 | 21 | 30 | 26 | 38 | 15 | 48 | 26 | 34 | 32 | 36 | 41 | 04 |
| ஹெல உறுமய | 3,409 | 8,881 | 6,360 | 9,116 | 2,824 | 9,247 | 9,085 | 13,493 | 13,192 | 18,485 | 14,311 | 5,952 | 17,768 | 25,385 | 29,850 | 3,260 |
| ருகுணு கட்சி | 03 | 06 | 01 | 00 | 00 | 01 | 01 | 03 | 01 | 04 | 01 | 02 | 05 | 02 | 00 | 00 |
| தேசிய முன்னணி | 02 | 05 | 01 | 01 | 01 | 01 | 05 | 06 | 03 | 03 | 0 | 01 | 03 | 04 | 06 | 00 |
| முற்போக்கு முன்னணி | 06 | 34 | 04 | 01 | 00 | 03 | 00 | 04 | 01 | 02 | 03 | 02 | 02 | 03 | 06 | 00 |
| முஸ்லிம் கட்சி | 05 | 35 | 10 | 07 | 09 | 04 | 01 | 04 | 0 | 03 | 07 | 01 | 03 | 04 | 03 | 01 |
| ஸ்வராஜ்ஜிய | 08 | 98 | 29 | 37 | 55 | 25 | 27 | 11 | 26 | 22 | 15 | 02 | 07 | 09 | 30 | 03 |
| பூமி புத்ர | 05 | 04 | 02 | 10 | 02 | 15 | 08 | 09 | 14 | 26 | 15 | 12 | 17 | 28 | 31 | 05 |
| இடது சாரி முன்னணி | 175 | 225 | 89 | 166 | 150 | 112 | 71 | 161 | 95 | 139 | 106 | 133 | 129 | 135 | 121 | 30 |
| சோசலிசக் ச. கட்சி | 10 | 10 | 11 | 11 | 05 | 06 | 07 | 24 | 07 | 18 | 04 | 04 | 06 | 14 | 18 | 04 |
| தேசிய மக்கள் கட்சி | 24 | 49 | 41 | 45 | 19 | 43 | 50 | 102 | 55 | 115 | 78 | 72 | 175 | 160 | 244 | 01 |
| ஜாதிக பெரமுன | 415 | 230 | 109 | 91 | 44 | 63 | 86 | 168 | 140 | 202 | 194 | 96 | 175 | 177 | 215 | 15 |
| சுயேச்சை 1 | 02 | 03 | 13 | 02 | 03 | 02 | 00 | 05 | 02 | 05 | 02 | 01 | 02 | 02 | 05 | 00 |
| சுயேச்சை 2 | 03 | 12 | 05 | 00 | 04 | 01 | 02 | 04 | 01 | 05 | 02 | 01 | 04 | 01 | 01 | 00 |
| சுயேச்சை 3 | 03 | 05 | 00 | 00 | 00 | 02 | 02 | 05 | 02 | 03 | 03 | 02 | 04 | 01 | 02 | 00 |
| சுயேச்சை 4 | 05 | 02 | 03 | 03 | 03 | 01 | 02 | 03 | 02 | 03 | 01 | 03 | 04 | 03 | 04 | 02 |
| சுயேச்சை 5 | 03 | 05 | 01 | 02 | 01 | 01 | 02 | 03 | 04 | 02 | 01 | 04 | 05 | 00 | 02 | 00 |
| சுயேச்சை 6 | 02 | 12 | 01 | 01 | 03 | 00 | 00 | 06 | 00 | 01 | 06 | 07 | 00 | 00 | 01 | 00 |
| சுயேச்சை 7 | 42 | 501 | 54 | 05 | 04 | 10 | 05 | 03 | 09 | 03 | 40 | 01 | 03 | 00 | 03 | 00 |
| சுயேச்சை 8 | 02 | 08 | 04 | 02 | 01 | 01 | 04 | 06 | 03 | 11 | 02 | 05 | 08 | 06 | 04 | 00 |
| சுயேச்சை 9 | 05 | 07 | 00 | 00 | 00 | 01 | 04 | 03 | 00 | 01 | 01 | 04 | 02 | 01 | 03 | 00 |
| சுயேச்சை 10 | 08 | 13 | 06 | 03 | 03 | 02 | 05 | 07 | 01 | 06 | 06 | 09 | 18 | 06 | 05 | 00 |
| சுயேச்சை 11 | 10 | 13 | 02 | 06 | 04 | 03 | 04 | 07 | 06 | 13 | 04 | 11 | 13 | 06 | 10 | 00 |

## குருநாகல் மாவட்டம்

| கட்சி | கல்கமுவ | நிக்கவரட்டிய | யாப்பகுவ | ஹிரியால | வாரியபொல | பண்டுவஸ்நுவர | பிங்கிரிய | கட்டுகம்பொல | குளியாப்பிட்டிய | தம்பதெனிய | பொல்காவலை | குருநாகல் | மாவத்தகம | தொடங்கஸ்லந்த | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 36,037 | 29,545 | 37,155 | 26,607 | 24,886 | 22,103 | 27,815 | 31,388 | 29,878 | 31,740 | 24,473 | 23,472 | 24,974 | 22,426 | 19,658 |
| ஐ.தே.க | 25,377 | 22,885 | 28,281 | 25,167 | 19,554 | 21,297 | 24,120 | 24,936 | 27,127 | 24,528 | 20,435 | 23,242 | 23,158 | 18,073 | 12,588 |
| முஸ்லிம் கூட்டமைப்பு | 41 | 34 | 48 | 56 | 27 | 26 | 37 | 31 | 39 | 25 | 30 | 37 | 65 | 46 | 08 |
| லலித் முன்னணி | 09 | 13 | 10 | 10 | 07 | 11 | 19 | 17 | 19 | 26 | 08 | 16 | 15 | 10 | 01 |
| சோசலிச கட்சி | 16 | 25 | 23 | 25 | 12 | 12 | 22 | 17 | 23 | 19 | 16 | 09 | 25 | 19 | 02 |
| ஹெல உறுமய | 795 | 1,427 | 1,387 | 2,740 | 1,569 | 1,803 | 2,504 | 3,212 | 3,413 | 3,422 | 3,237 | 5,347 | 3,391 | 1,138 | 2,074 |
| ருகுணு கட்சி | 00 | 04 | 00 | 02 | 00 | 00 | 00 | 02 | 02 | 00 | 00 | 03 | 01 | 01 | 02 |
| தேசிய முன்னணி | 03 | 03 | 04 | 02 | 05 | 02 | 03 | 03 | 04 | 05 | 03 | 01 | 05 | 00 | 05 |
| முற்போக்கு முன்னணி | 03 | 03 | 02 | 00 | 02 | 01 | 03 | 03 | 00 | 05 | 01 | 01 | 04 | 00 | 00 |
| முஸ்லிம் கட்சி | 02 | 03 | 00 | 01 | 01 | 01 | 06 | 03 | 05 | 03 | 02 | 07 | 01 | 02 | 02 |
| ஸ்வராஜ்ஜிய | 02 | 01 | 03 | 01 | 00 | 03 | 00 | 06 | 00 | 01 | 03 | 03 | 01 | 00 | 01 |
| பூமி புத்ர | 04 | 04 | 02 | 04 | 02 | 02 | 01 | 04 | 10 | 07 | 03 | 05 | 10 | 02 | 04 |
| இடது சாரி முன்னணி | 11 | 11 | 22 | 34 | 18 | 16 | 35 | 18 | 18 | 13 | 27 | 45 | 42 | 21 | 18 |
| ஜாதிக பெரமுன | 31 | 88 | 48 | 63 | 41 | 39 | 130 | 80 | 109 | 80 | 86 | 92 | 109 | 47 | 15 |
| மிதவாதக்கட்சி | 01 | 01 | 04 | 02 | 08 | 00 | 03 | 02 | 03 | 01 | 05 | 10 | 11 | 03 | 00 |
| சுயேச்சை 1 | 01 | 01 | 02 | 00 | 00 | 02 | 03 | 01 | 04 | 01 | 02 | 02 | 02 | 00 | 04 |
| சுயேச்சை 2 | 00 | 01 | 01 | 01 | 01 | 00 | 03 | 03 | 03 | 01 | 01 | 02 | 00 | 00 | 00 |
| சுயேச்சை 3 | 01 | 02 | 04 | 05 | 01 | 00 | 03 | 03 | 05 | 03 | 01 | 02 | 02 | 01 | 03 |
| சுயேச்சை 4 | 00 | 01 | 02 | 02 | 01 | 01 | 02 | 01 | 00 | 03 | 01 | 03 | 04 | 00 | 02 |
| சுயேச்சை 5 | 02 | 02 | 04 | 04 | 06 | 02 | 05 | 06 | 00 | 01 | 07 | 00 | 13 | 01 | 00 |
| சுயேச்சை 6 | 00 | 04 | 00 | 00 | 01 | 02 | 00 | 00 | 01 | 00 | 00 | 01 | 00 | 01 | 01 |
| சுயேச்சை 7 | 04 | 02 | 01 | 02 | 01 | 00 | 01 | 03 | 00 | 00 | 01 | 04 | 00 | 00 | 01 |
| சுயேச்சை 8 | 07 | 02 | 01 | 04 | 01 | 01 | 02 | 03 | 02 | 02 | 02 | 00 | 03 | 02 | 02 |
| சுயேச்சை 9 | 08 | 04 | 07 | 05 | 01 | 01 | 10 | 04 | 02 | 04 | 05 | 05 | 07 | 07 | 00 |
| சுயேச்சை 10 | 26 | 33 | 18 | 19 | 10 | 14 | 29 | 21 | 35 | 12 | 14 | 16 | 18 | 18 | 03 |

# இலங்கைச் சட்டக் கல்லூரி

## நுழைவுப் பரீட்சை - 2004

* இலங்கையில் சட்டத்தரணிகளை உருவாக்கும் ஒரே ஒரு நிறுவனம் இலங்கைச் சட்டக் கல்லூரியே.
* பல்கலைக்கழகங்களில் சட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்கள் இலங்க்கச் சட்டக் கல்லூரியால் மட்டுமே நடத்தப்படும் சட்டத்தரணிகள் இறுதிப் (Attoney-at-Law) பரீட்சைக்குத் தோற்று வதன் மூலமே சட்டத்தரணியாகமுடியும்.
* இலங்கைச் சட்டக் கல்லூரிக்கு நுழைவுப் பரீட்சை மூலம் நேரடியாகத் தெரிவாகிக் கற்பதே ஏனைய வழிகளைவிடக் குறுகிய காலத்திலும் குறைந்த செலவிலும் சட்டத்தரணியாவதற்கான சிறந்த வழி.
* இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுக்கு வயதெல்லை கிடையாது.
* இலங்கைச் சட்டக் கல்லூரிக்குத் திறமையின் அடிப்படையிலேயே (MERIT Basis) தெரிவு செய்யப்படுகின்றனர்.
* இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையான ஆகக் குறைந்த கல்வித் தகைமை:

G.C.E. (A/L) (ஒரே அமர்வில் அவசியம்)
பழைய பாடத்திட்டமாயின் 4 "S"
புதிய பாடத்திட்டமாயின் 3 "S"
அத்துடன்
G.C.E. (O/L) (ஒரே அமர்வில் அவசியமில்லை)
தமிழிற்கும் ஆங்கிலத்திற்கும் திறமை ("C") சித்தி

* நுழைவுப் பரீட்சைக்கு விரும்பிய மொழியில் தோற்றமுடியும்.
* நுழைவுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் வாரங்களில் கோரப்படும். நுழைவுப் பரீட்சை செப்ரெம்பர் மாத முற்பகுதியில் நடைபெறும்.

** மேற்படி நுழைவுப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர் களுக்காக இலங்கைச் சட்டக் கல்லூரி - சட்ட மாணவர் இந்து மகாசபை வழிகாட்டல் வகுப்புக்களை யாழ். நகரில் மாதந்தோறும் ஏற்பாடு செய்துள்ளது.

** விரிவுரைகள் சட்ட விரிவுரைகள் சட்டத்தரணிகள் மற்றும் இந் நுழைவுப் பரீட்சை மூலம் சட்டக் கல்லூரிக்குத் தெரிவான சட்ட மாணவர்களால் நடத்தப்படும்.

** **இம் (April) மாதத்திற்கான வழிகாட்டல் வகுப்புக்கள் 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30வரை யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடை பெறும்.**

கட்டணம் நாளுக்கு ரூபா 150/=

சட்டமாணவர் இந்து மகாசபை
இலங்கைச் சட்டக்கல்லூரி.

**Compliments from**
Siedles Trading Company Limited
Distributor in Sri Lanka
**For**
**SONY Products**
Showroom and Sales Office at
# 1J, Stanley Road,
Jaffna.
(30610) (24)